# "வரிவிதிப்பில் அநீதியிருந்தால் நிவர்த்திப்போம்"


Registered as a News paper in Ceylon விலை சதம் 15 ★ ★

# ஈழநாடு

EELANADU

மலர் 11
இதழ்: 26

தபால்பெட்டி எண் : 49
போன்: 389
National Tamil Daily
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் மாசி 25 ஜுஹறஜ்: 18 சனிக்கிழமை [8-3-69



இறக்குமதி செய்யப்பெற்ற
பிறேம் வகைகளுக்கும்
மூக்குக் கண்ணுடி
வகைகளுக்கும்
இன்றே விஜயஞ் செய்யுங்கள்
D. சேனுதிராஜா
(பல் கட்டுபவர் — கண் பரிசோதகர்)
9, மெயின் வீதி — யாழ்ப்பாணம்.


## சூடான விவாதத்துக்கு மேயர் அளித்த பதில்

(நமது சிறப்பு நிருபர்)

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குள்ளிருக்கும் காணிகளை விலைமதிப்பீட்டாளர்கள் மதிப்பீடு செய்ததன் விளைவாக வரிவிகிதத்தில் ஏற்றத்தாழ்வுகாட்டப்பட்டு நியாயமற்ற முறையில் வரி விதிக்கப்பட்டிருக்குமானுல், அவைகளுக்குத் தெரிவிக்கப்படும் ஆட்சேபனைகளை மாநகரசபை அங்கத்தவர்களைக் கொண்ட ஓர் உபகுழு பரிசிலனைசெய்து நிச்சயமாக நியாயம் வழங்கப்படும்'' என்று யாழ்ப்பாண நகர மேயர் திரு. சி. நாகராசா அறிவித்ததைத் தொடர்ந்து பரபரப்பான சூழ்நிலையில் நேற்றுப்பிற்பகல் ஆரம்பமான யாழ்ப்பாண மாநகர சபையின் விசேஷ கூட்டம் யாழ். மாநகர சபை எல்லைக்குள்உள்ள காணிகளுக்கு விலைமதிப்பீடு செய்த விலை மதிப்பீட்டு இலாகா உத்தியோகத்தர்களுக்கு அதற்குரிய வேதனமாகி வழங்கப்படவேண்டிய பாக்கித் தொகை 26,764 ரூபாய் 63சதத்தை வழங்குவதென நான்கு அதிகப்படியான வாக்குகளால் தீர்மானித்தது.

''வரி உயர்வு பற்றியோ வரியைக் குறைப்பது பற்றியோ இன்றைய மாநகர சபைக்கூட்டம் விவாதிக்க வேண்டுமென்பதல்ல இன்றைய பிரச்னை. மாநகரசபை எல்லைக்குள்ளிருக்கும் காணிகளை மாநகர சபையின் கோரிக்கையின் மீது மதிப்பீடு செய்த அரசாங்க விலை மதிப்பீட்டு இலாகாவைச் சேர்ந்த விலைமதிப்பீட்டாளர்களுக்கு, அவர்கள்செய்த வேலைகளுக்குரிய வேதனத்தின் பாக்கியைக் கொடுக்க வேண்டாமா, கொடுக்கக் கூடாதா என்பதைத் தீர்மானிப்பதுதான் இன்றைய கூட்டத்தின் நோக்கம்'' என்று கூறிய மேயர் திரு. நாகராசா, முன்னைய கூட்டத்தில் இதுபற்றி விவாதித்து விளக்கமும் சொல்லப்பட்டுவிட்டதால் இந்த விஷயம்பற்றி இன்று விவாதிக்கவேண்டிய அவசியமில்லையென்றும் விலைமதிப்பீட்டாளருக்கு பாக்கிப் பணம் கொடுக்கவேண்டுமென்பதை ஆதரிப்போரையும் கொடுக்கக்கூடாதென் போரையும் வாக்களிக்கு மாறு கேட்டார்.

விவாதிக்காமல் எந்தப் பிரச்னையையும் வாக்கெடுப்புக்கு விடக்கூடாதென்றும் விவாதிக்க அனுமதியளிக்க வேண்டுமென்றும் திரு. அ. த. துரையப்பா ஓர் ஒழுங்குப் பிரச்னையைக் கிளப்பினுர். இதைத்தொடர்ந்து விலை மதிப்பீட்டாளருக்கு பாக்கிப்பணம் கொடுககப்படவேண்டுமென்று திரு. தா. ச. துரைராசா ஒரு பிரேரணையைப் பிரரித்தார். ஒழுங்குப்பிரச்னையும் விலை மதிப்பீட்டாளருக்குப் பாக்கிப்பணம் செலுத்த வேண்டுமென்ற பிரேரணையும் இரண்டறக்கலந்து, அங்கத்தவர் பலரினதுவேண்டுகோளுக்கும், உதவிமேயர் திரு. ஆ. துரைராஜசிங்கத்தின் யோசனைக்கும் இணங்க அவரவர் கருத்துக்களைத் தெரிவிக்க மூன்று நிமிஷம் வரை மேயர் அனுமதியளித்தாராயினும் சில அங்கத்தவர்கள் நீண்டநேரமும் தங்கள் கருத்தை விளக்கிப் பேசினர். திரு. அ. விசுவநாதன், திரு. அல்பிரட் துரையப்பா, திரு. ஆ. துரைராஜசிங்கம், திரு. தம்பு கந்தையா, திரு. அன்ரனி, திரு. சிவசுப்பிரமணியம் ஆகியோரும் திருமதி சுவாமிநாதர். திரு ஏ. ஜீ. ராஜசூரியர், ஜனுப். எம். ஏ. சி, எஸ். ஏ? காதர், ஜனுப் ஜி. எம். பவீர், திரு. நா, த, செல்லத்துரை, திரு. ரி. கே. இராசரத்தினம் ஆகியோரும் விளக்கமாகவும் சுருக்கமாகவும் தங்கள்கருத்துக்களை எடுத்துக் கூறினுர்கள். இந்த விவாதத்தில் இடையிடையே சூடான வார்த்தைகளும் அரசியல் கலந்த நகைச்சுவைகளும் இடம்பெற்றன.

விலைமதிப்பீட்டுக்கும் வரி உயர்வுக்கும்முன்னையமேயர்கள் சிலர்மீதும் முன்னைய விசேஷ ஆணையாளர் நிர்வாகத்தின்மீதும் சிலர் பொறுப்பைச் சுமத்தினர். எப்படியானுலும் விலைமதிப்பீட்டாளருக்குப் பாக்கிப் பணம்



கொடுக்கப்படவேண்டியது இந்தச்சபையின் கடமைதான் என்பதை மேயரும் மற்றும் சிலரும் விளக்கிக் கூறினர்.

'நகருக்குச் சேவைசெய்வதற்கும், நகரமக்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்கும் வரிவசூலிக்கவேண்டியதுதான், ஆனுல் ஏழை மக்களைப் பாதிக்காதவகையில் வசதியுள்ளவர்களிடமிருந்து வரி அறவிடுவதில் தவறில்லை' என்பதில் அங்கத்தவர்களுக்கிடையில் கருத்துவேறுபாடுஇருக்கவில்லை.

முடிவில் மேயர் திரு. நாகராசா பேசுகையில், விலை மதிப்பீட்டாளர் ஓரளவு சரியான முறையில் நடந்துள்ளதாகவும் அதிலும் குறைகளிருந்தால் அவற்றைக் கவனித்து நிவாரணம் வழங்கப்படுமென்றும் கூறியதுடன், பல்கலைக்கழகப் படிப்புக்கு ஐந்து மாணவருக்கு உபகாரச்சம்பளம் வழங்கவும் மாநகரசபை எல்க்குள்ளிருக்கும் ஏழைப்பிள்ளைகளுக்கு இலவசமாக பாடப்புத்தகங்கள் வாங்கிக் கொடுக்கவும், இலவசமாக ஆலயத் திருவிழாக்களுக்கு மின்சார வெளிச்சம் கொடுக்கவும் மற்றும் பல நல்ல திட்டங்களையும் தீட்டியிருப்பதால் மாநகரசபைக்குப் பணம் வேண்டியதுதானென்றும் இதற்கு வசதியுள்ளவர்களிடமிருந்து வரி அறவிடத்தான் வேண்டுமென்றும் சொன்னுர்,

# மே மாதம் பொதுத் தேர்தல்
# 27-ல் ஆட்சிமன்றம் கலைபடும்

## அபேட்சகர்கள் தெரிவில் தமிழ்க்கட்சிகள் முஸ்தீபு

பம்பலப்பிட்டி, வெள்ளி

இம் மாதம் 27-ம் திகதி ஆட்சிமன்றம் கலைக்கப்படலாமென்றும் அடுத்த பொதுத் தேர்தல் இவ்வருடம் மே மாதத்தில் நடைபெறலாமென்றும் அரசாங்கத்துடன் நெருங்கிய தொடர்புள்ள வட்டாரங்களிலிருந்து நம்பிக்கையாகத் தெரியவருகிறது. இப்போதுள்ள ஒழுங்குகளின்படி இம்மாதம் 27-ம் திகதி ஆட்சிமன்றம் கலைக்கப்படுவது நிச்சயமென்றும் வேறு ஏதாவது எதிர்பாராத சம்பவங்கள் ஏற்பட்டாலொழிய இதில் மாறுதல் ஏற்படாதென்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

தேர்தலை நடத்துவதற்கான சகல நடவடிக்கைகளிலும் அரசாங்கம் தற்போது ஈடுபட்டுள்ளது. பாதுகாப்புப்படைகளுக்கு அரசாங்கம் இதுபற்றி அறிவித்தல் செய்துள்ளதாகவும் தெரிய வருகிறது

தேசிய அரசாங்கத்துக்குள்ளேயே பிளவு ஏற்படுத்தக்கூடிய சில மசோதாக்கள் இருப்பதால் இந்த நெருக்கடியான கட்டத்தைச் சமாளிப்பதற்காகத் பொதுத் தேர்தலை விரைவில் நடாத்

அளிக்கப்பட இருப்பதாகவும் கிளிநொச்சி, உடுவில், காங்கேசன்துறை தொகுதிகளில் சிலசமயம் மாற்றம் ஏற்படலாமென்றும் தெரிய வருகிறது.

தமிழரசு கட்சி சார்பில் இம்முறை, மூதூர், ஊர்காவற்றுறை தொகுதிகளில் புதிய அபேட்சகர்கள் நிறுத்தப்படுவார்கள். அநேகமாக மற்றும் தொகுதிகளில் பழைய [illegible]

நிறுத்தப்படுவார்களெனத் தெரியவருகிறது.

இலங்கை திராவிடமுன்னேற்றக்கழகமும், வட பகுதியில் நான்கு தொகுதிகளில் போட்டியிடவிருப்பதாக தெரியவருகிறது.

இடதுசாரி கட்சிகளும் வடபகுதியில் உள்ள தொகுதிகளுக்கு அபேட்சகர்களை தெரிவுசெய்வதில் அக்கறைகாட்டி வருகின்

## 'மொழியை மதத்துடன் இணைக்கக் கூடாது'

### ஆட்சிமன்றத்தில் கல்வி அமைச்சர்

கொழும்பு, வெள்ளி

''மொழியை மதத்துடன் சம்பந்தப்படுத்தக் கூடாது'' என்று கல்வி கலாச்சார அமைச்சர் திரு. ஐ. எம். ஆர். ஏ. இரியகொல்லை இன்று மக்கள் பிரதிநிதிகள் சபையில் தெரிவித்தார்,

வெசாக் பண்டிகைநாளின் போது இந்தியாவில் தயாரிக்கப்பட்ட படங்கள் திரையிடப்படவிருப்பதாகவும் இலங்கைப்படங்களை ஏன் திரையிடக்கூடாதென தம்பதெனியாப்பிரதிநிதி திரு. ஆர். ஜி. சேனநாயகா சபையின் ஒத்திவைப்புப் பிரேரணை மீது பேசுகையில்குறிப்பிட்டதற்குப் பதிலளித்துப் பேசுகையிலேயே கல்வி அமைச்சர் மேற்கண்டவாறு கூறினுர்.

புத்தபிரானின் போதனைகள் பாளிமொழியிலிருந்துதான் சிங்களத்தில் மொழி பெயர்க்கப்பட்ட தென்றும் மொழியையும் மதத்தையும் சம்பந்தப்படுத்தக்கூடாதென்றும் கல்வி அமைச்சர் கூறினுர்.

ஏழாலை கி. ச. தேர்தல்

## தந்தையும் மகனும் ஒரே வட்டாரத்தில் போட்டி

[illegible] வெள்ளி 5-ம் வட்டாரம்: எஸ்.

## பதவிக் காலம் முடிந்த பின்னரே தேர்தல் நடக்கும்

### எதிர்க்கட்சியினர் கூறுகிறுர்கள்

## அமெரிக்க அப்போலோ - 9


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழாலை கி. ச. தேர்தல்

## தந்தையும் மகனும் ஒரே வட்டாரத்தில் போட்டி

குரும்பசிட்டி, வெள்ளி
ஏழாலை கிராமசபைத்தேர்தல நியமனப்பத்திரங்கள் வெள்ளிக்கிழமைகாலையாழ். மாவட்ட உதவித் தேர்தல் அதிகாரி திரு. எஸ். கந்தசாமி முன்னிலையில் தாக்கல் செய்யப்பட்டபோது மொத்தம் 19 வட்டாரங்களில் 2 வட்டாரங்களுக்கு அங்கத்தவர்கள் பொட்டியின்றித் தெரிவுசெய்யப்பட் டனர். 5பேர் போட்டியிடும் 12-ம் வட்டாரத்தில் தந்தையும் மகனும் போட்டியிடுகின்றனர். 17 வட்டாரங்களில் மொத்தம் 46 அபேடசகர்கள் நியமனப்பத்திரம் தாக்கல் செய்தனர்.

போட்டியிடும் அபேட்சர்கள் விபரம் வருமாறு:—

1-ம் வட்டாரம்: எஸ். அருந்தவரத்தினம், எம். ரி. துரைரசா, எஸ், குணரத்தினம்.

2-ம் வட்டாரம்: ரி. இரத்தினம், எஸ். சண்முகவடிவேல், எஸ். அப்புத்துரை.

3-ம் வட்டாரம்: எம். நாகலிங்கம், எஸ். தருமலிங்கம், எம். கணேசரத்தினம், கே. யோகரத்தினம்.

4-ம் வட்டாரம்: ரி. இராசரத்தினம், எம். சின்னத்தம்பி.

5-ம் வட்டாரம்: எஸ். கனகலிங்கம், எம். இரத்தினம்.

6-ம் வட்டாரம்: கே. கந்தையா, வீ. சுப்பிரமணியம்.

7-ம் வட்டாரம்: எஸ். இராசையா, கே. நாகமணி.

8-ம் வட்டாரம்: கே. சிவகுரு, ஏ. செல்லத்துரை.

9-ம் வட்டாரம்: எஸ். ஜெயானந்தன், எஸ். சண்முகானந்தம், எஸ். தருமலிங்கம்.

10-ம் வட்டாரம்: ஈ. கந்தையா (போட்டியில்லை.

11-ம் வட்டாரம்: என். வேலுப்பிள்ளை, வீ. வீரசிங்கம், எஸ். பரமகுருநாதன்.

12-ம் வட்டாரம்: கே. கந்தசாமி, ரி. பஞ்சாட்சரதேவன், உ, திருமேனி, என். பாலசிங்கம், கே. சுந்தரலிங்கம்.

13-ம் வட்டாரம்: கே. தம்பிமுத்து, ஐ. கந்தலிங்கம், பீ. கந்தையா.

14-ம் வட்டாரம்: எஸ். அருளம்பலம், எஸ். தம்பாப்பிள்ளை கே. வல்லிபுரம், என். திருநாவுக்கரசு.

15-ம் வட்டாரம்: பீ. துரைசிங்கம், வீ, தம்பாப்பிள்ளை.

16-ம் வட்டாரம்: என். சின்னையா. எம். தெய்வேந்திரம்.

17-ம் வட்டாரம்: கே. இராசேந்திரா எம். கனகரத்தினம்.

18-ம் வட்டாரம்: பீ. இளையதம்பி, என். தம்பிராசா.

19-ம் வட்டாரம்: எஸ். செல்லத்துரை (போட்டியில்லை).

---

செய்துள்ளதாகவும் தெரியவருகிறது

தேசிய அரசாங்கத்துக்குள்ளேயே பிளவு ஏற்படுத்தக்கூடிய சில மசோதாக்கள் இருப்பதால் இந்த நெருக்கடியான கட்டத்தைச் சமாளிப்பதற்காகத் பொதுத் தேர்தலை விரைவில் நடாத்துவதெனப் பிரதமர் தீர்மானித்திருப்பதாக அறியப்படுகிறது.

அடுத்த தேர்தலுக்கான அபேட்சகர்களைதெரிவுசெய்வதற்காக தமிழ்காங்கிரஸ் கமிட்டி இம்மாதம் 15ந் திகதி யாழ்ப்பாணத்தில்கூடுகிறது. தேர்தல் எச்சமயத்திலும் நடைபெறவிருப்பதால் அபேட்சகர்களை முன்கூட்டியே தெரிவுசெய்ய வேண்டுமென கமிட்டி உறுப்பினர்கள் கடந்த வாரம் கருத்து தெரிவித்ததைத் தொடர்ந்தே அபேட்சகர்கள் தெரிவு நடைபெறுவதாக அறியப்படுகிறது.

கடந்ததேர்தலில்போட்டியிட்ட அபேட்சகர்களுக்கே இத்தடவையும் முதலிடம்

தமிழரசு கட்சி சார்பில் இம்முறை, மூதூர், ஊர்காவற்றுறை தொகுதிகளில் புதிய அபேட்சகர்சள் நிறுத்தப்படுவார்கள். அநேகமாக மற்றும் தொகுதிகளில் பழைய அபேட்சகர்களே தாக தெரியவருகிறது.

இடதுசாரி கட்சிகளும் வடபகுதியில் உள்ள தொகுதிகளுக்கு அபேட்சகர்களை தெரிவுசெய்வதில் அக்கறைகாட்டி வருகின்றன.

விஷயம்பற்றி இன்று விவாதிக்கவேண்டிய அவசியமில்லையென்றும் விலைமதிப்பீட்டாளருக்கு பாக்கிப் பணம் கொடுக்கவேண்டுமென்பதை ஆதரிப்போரை

ளருக்குப் பாக்கிப் பணம் சொன்னார்,

---

அமெரிக்க அப்போலோ - 9

## தாய்க்கலத்திலிருந்து இரு விண்வெளிவீரர் பிரிந்தனர்

டெக்ஸாஸ், மார்ச் 7
எல்லையற்ற அண்டவெளியில் அமெரிக்க அப்போலோ-9 விண்வெளி வீரர்கள் அபாயகரமான சாதனையை இன்று செய்தார்கள். அப்போலோ-9 தாய்கலத்திலிருந்து விண்வெளி வீரர்களான ரஸலும், ஜேம்மக்டிலிற்றும் தனிக்கூடாகப் பிரிந்து சந்திர மண்டல-ஈர்ப்புக்குள் நுழைந்து கொண்டனர்.

விண்வெளிவீரர் ஸ்விகாட் தாய்க்கலத்திலிருந்து கொண்டு பூமிக்கு தகவல் கொடுத்துக்கொண்டிருக்கிறார். புகழ்மிகு சாதனை இன்று இலங்கை நேரப்படி மாலை 6-10 மணிக்கு நடைபெற்றது.

மனிதன் சந்திரனில் இறங்குவதற்கான ஆராய்ச்சிகளை தாய்க்கலத்திலிருந்து பிரிந்து கென்று சந்திரமண்டல ஈர்ப்புச் சக்திக்குள் நுழைந்துள்ள இரு விண்வெளி வீரர்களும் நடாத்துவர்

மீண்டும் 5 மணி நேரத்திற்குப் பின் தனிக் கூடாகப் பிரிந்துசென்ற இரு வெண்வெளி வீரர்களும் தாய்க்கலத்துடன் இணைந்து கொள்வர்

---

கச்சதீவு பிரச்னை

## சுமுகமான தீர்வு விரைவில்காணப்படும்

### பிரதமர் நம்பிக்கை

கொழும்பு, வெள்ளி
'கச்சதீவுப் பிரச்னை சம்பந்தமாக இலங்கைக்கு இந்தியாவுக்குமிடையில் சுமுகமானதீர்வு ஏற்படும்' என்று பிரதமர் திரு. டட்லி சேனநாயகா இன்று மக்கள் பிரதிநிதிகள் சபையில் நம்பிக்கை தெரிவித்தார்.

மக்கள் பிரதிநிதிகள் சபையின் இன்றைய கூட்டத்தின் ஒத்திவைப்புப் பிரேரணை மீது தெவிநுவரை எம். பி. திருரொனி டி மெல் பேசுகையில் 'கச்சதீவு இந்தியாவுக்குச் சொந்தமென்பதில் சந்தேகமில்லை'' என்று இந்தியமக்கள் பிரதிநிதிகள் சபையில் இந்திய வெளிவிவகார அமைச்சர் திரு. தினேஷ்சிங் சமீபத்தில் கூறினுரென்று குறிப்பிட்டு, ''இலங்கைக்குத்தான் கச்சதீவு சொந்தமென்பதில் ஐயமில்லை. இனியும் பேச்சுவார்த்தை எதற்கு?'' என்று கேட்டார்.

இதற்குப் பிரதமர் திரு. டட்லி பதிலளிக்கையில் லோகசபையில் திரு. தினேஷ் சிங் பேசிய பேச்சை பதிவேட்டிலிருந்து வாதித்தார். 'கச்சதீவு இந்தியாவுக்குத்தான் சொந்தம் என்று நம்புகிறோம். நம்பாவிட்டால் பேச்சு எதற்கு? இருதரப்பினருக்குமிடையில் பேச்சுக்கள் நடைபெறுகையில் எந்த விஷயத்தையும் திட்டவட்டமாக இப்போதுசொல்லமுடியாது' என்று திரு. தினேஷ் சிங் கூறியிருந்ததை பிரதமர் குறிப்பிட்டு இப்பிரச்னைக்கு விரைவில் சுமுகமான தீர்வுகாணப்படுமென பிரதமர் சொன்னார்.

தமிழ்நாட்டில் வகுப்புவாத தி. மு. க. ஆட்சிக்கு வந்திருப்பதால் கச்சதீவுப் பிரச்னை சம்பந்தமாக இலங்கைக்கு ஆபத்து என்று திரு. ரொனி டி. மெல் குறிப்பிட்டதுபற்றி பிரதமர் எதுவும் சொல்லவில்லை,

---

## பதவிக் காலம் முடிந்த பின்னரே தேர்தல் நடக்கும்

### எதிர்க்கட்சியினர் கூறுகிறார்கள்

கொழும்பு, வெள்ளி
தேசிய அரசாங்கம் தற்போதைக்கு பொதுத் தேர்தலை நடத்தமாட்டாதெனவும், அது தனது பதவிக் காலம் முழுவதும் ஆட்சியை நடத்திவிட்டே தேர்தலை நடத்துமென்றும் எதிர்க்கட்சியினர் கருதுகிறார்களாம்.

இலங்கை சுதந்திரம் அடைந்தபின்னர் அமைக்கப்பட்ட எந்த அரசாங்கமும் தனது பதவிக்காலம் முழுவதும் ஆட்சியை நடத்தவில்லையென்றும். ஆனால் தேசிய அரசாங்கம் பதவிக்காலம்வரை காத்திருக்குமென்றும் அவர்கள் கருத்து வெளியிட்டுள்ளார்கள்.

---

மணமக்கள் வந்த வான்

## லொறியுடன் மோதியதில் 5 பேர் பலி

கொழும்பு, வெள்ளி
திருமணம் முடிந்து வீட்டுக்குத் திரும்பிக்கொண்டிருந்த மணமக்கள் பிரயாணம் செய்த வான் ஒன்று லொறியுடன் மோதியதால் 5 பேர் பலியாகினர். பலர் படுகாயமுற்றனர் இச்சம்பவம் யாழ்ப்பாணம்-கண்டி வீதியில் நடைபெற்றது.

திருக்கோணமலையிலிருந்து வந்துகொண்டிருந்த வானில் 20 பேர் பிரயாணம் செய்ததாகவும், வான் விபத்துக்குள்ளானதில் மணமகள் உட்பட ஐவர் மாண்டதாகவும் அறிவிக்கப்பட்டது.

திருக்கோணமலை, கும்பிளப்பிட்டியாவைச் சேர்ந்த குணவதிஅம்மா (மணமகள்) சுமணதாசா (வான் சாரதி) ராசிக் (வயது 7), பூலிங்கம், எஸ். நாகமுத்து ஆகியோரே மரணமானவர்களாவர். இதில் 2 பேர் வவனியா ஆஸ்பத்திரியிலும், 2 பேர் அனுராதபுர ஆஸ்பத்திரியிலும், குணவதிஅம்மா (மணமகள்) கொழும்பு ஆஸ்பத்திரியிலும் மரணமடைந்தனர். வானில் பிரயாணம் செய்த மிகுதி 15 பேரும் படுகாயமுற்று ஆஸ்பத்திரியில் சிகிச்சைபெற்றுவருகின்றனர்.

முல்லைத்தீவைச் சேர்ந்த மணமகனை சுந்தரம் அபாயகரமானநிலையில் உள்ளதாக கூறப்பட்டது.

## போட்டியின்றி தெரிவு

சென்னை, மார் 7
மறைந்த தமிழக முதல்வர் அறிஞர் அண்ணாவின் துணைவியார் திருமதி ராணி அண்ணாதுரை தமிழ்நாடு மேல் சட்டசபைக்கு மாநகராட்சித் தொகுதி இடைத் தேர்தலில் போட்டியின்றி தெரிவுசெய்யப்பட்டிருப்பதாக தேர்தல் அதிகாரி இன்று அறிவித்தார்.

அண்ணா மறைவைத் தொடர்ந்து காலியான அவரது இடத்துக்கே திருமதி ராணி அண்ணாதுரை தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

---

புனிதவதி கொலைவழக்கு

# "கொலை செய்துவிட்டு வந்திருக்கிறேன் நீங்கள் ஒன்றுக்கும் பயப்படவேண்டாம்"

## எதிரி தன்னிடம் கூறியதாக சிவராசா சாட்சியம்

யாழ்ப்பாணம், சனி
''தான் ஒரு கொலை செய்துவிட்டு வந்திருப்பதாக என்று எதிரி என்னிடம் கூறினார். நீங்கள் ஒன்றுக்கும் பயப்படவேண்டாம் என்றும், தான் எல்லா உண்மைகளையும் பொலிசுக்குச் சொல்லுவதாகவும் எதிரி மேலும் கூறினார். இதன் பின் நான் பயந்துவிட்டேன். எதிரி அன்றிரவு எங்களுடன் தான் படுத்தார்''.

புனிதவதி கொலைவழக்கில் தாமோதரம்பிள்ளை சிவராசா என்ற வாலிபன் நேற்றுச் சாட்சியமளிக்கும் போது மேற்கண்டவாறு கூறினார்.

இவ்வழக்கு நேற்றுக் காலை மூன்றாவது தினமாக வடபகுதி அசைஸ் கோர்ட்டில் நீதியரசர் பீ. ரி. பண்டிதகுணவர்த்தன முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

இவ்வழக்கில் தொல்புரத்தில் 67-ம் ஆண்டு அக்டோபர் 4-ந் திகதி கிருஷ்ணபிள்ளை என்பவர் புனிதவதியைக் கொலை செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

சிவராசா சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

சம்பவம் நடந்த தினம் நான் பரீட்சைக்காகப் படித்துக்கொண்டிருந்தேன். எதிரியை எனக்குத் தெரியும். இறந்தவரின் வீடு இப்போது தெரியும். 150 யார் தூரத்தில் குஞ்சியப்பர் சுப்பிரமணியத்தின் வீடு இருக்கிறது. நான் அங்கு தான் பரீட்சைக் காகப் படித்தேன். வரதராசாவும் என்னுடன் படித்துக் கொண்டிருந்தார். எதிரியும் சுவாமிநாதனும் சயிக்கிளில் வாந்தார்கள். எதிரி இறங்கி அறைக்குள் வந்தார். மயில்வாகனம் சென்றுவிட்டார். அப்பொழுது இரவு 10 மணி இருக்கும். எதிரி கதவு மட்டும் வந்து பிறகு வருவதாகக் கூறிச் சென்றார். சாரமும் பெனியனும் அணிந்திருந்தார். வாளியும் துவாயும் எடுத்துக் கொண்டு போனார். அரை மணி நேரத்தின் பின் திரும்பிவந்தார்.

### எதிரி நித்திரை

திரும்பிவரும்போது எதிரி துவாய் உடுத்திருந்தார். சாரத்தையும் பெனியனையும் காணவில்லை வரதராசாவின் பெட்சீட்டை எதிரி உடுத்தார் நான் அவரைக் கண்டதும் பயந்து விட்டேன்.

தான் ஒரு கொலை செய்துவிட்டு வந்திருப்பதாகவும், தங்களைப் பயப்பட வேண்டாமென்றும், பொலிசுக்கு எல்லாம் சொல்லுவதாக்வுத் எதிரி கூறினார். அன்றிரவு எதிரி எங்களுடன் படுத்தார். மறு நாள் காலை நான் எழுந்து எனது வீட்டிற்குச் சென்றுவிட்டேன். எதிரி அங்கு நித்திரை செய்துகொண்டிருந்தார். எதிரி சொன்னதை குஞ்சியப்புவிற்கு சொல்வதற்கு தான் வீட்டிற்குப் போனேன். அம்மா, அண்ணைக்கு நான் இதைச் சொல்ல விரும்பவில்லை. குஞ்சியப்பு வீட்டில் இல்லை. நான் திரும்பி வந்தபோது பொலிசார் நின்றனர். எதிரியும் அங்கு நின்றார். எதிரிக்கு எனது சேட் ஒன்றைக் கொடுத்தேன்.

(விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது)

---


இலங்கை பூராவும் விற்பனையாகின்றது!

பங்குனி இதழ்

பொம்மை

மூவர்ண நிறத்துடன் அறிஞர் அண்ணாவின் படம்.

உடன்பிரதிக்கு முந்துங்கள்.

1216



தமிழகத்தின் தலைசிறந்த மாதஇதழ்

பொம்மை

இலங்கை முழுவதும் ஏஜண்டுகள் தேவை

த. தம்பித்துரை & சன்ஸ்

யாழ்ப்பாணம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரிவிளம்பரம்

### தேவை

கடைச்சல் தொழிலில் நன்கு அனுபவமுள்ள ஒரு இளைஞர் தேவை. எழுத்தில் விண்ணப்பிக்கவும். நோர் தேன் இன்டஸ்ட்றீஸ், 81, ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம். 737

காங்கேசன் துறை மயிலிட்டி கூட்டுறவுத் தொழிலாளர் சங்கத்திற்கு ஒரு மனேச்சர் தேவை. விரும்புவோர் 15-3-69-க்கு முன் விண்ணப்பிக்கவும். சம்பளம் எல்லாம் உட்பட 120 ரூபா. தொடக்கம்: பிணை காசு 1000 ரூபா. தராதரம் கூட்டுறவுக் கலாசாலையில் சித்தி பெற்றவராய் இருத்தல்வேண்டும். காரியதரிசி மா. அருளானந்தம், தையிட்டி, மண்ணிகுப்பை, காங்கேசன்துறை. 733

கொழும்பில் உத்தரவாதமுள்ள கம்பனிக்கு வட மாகாணத்தில் ஒவ்வொரு நகரத்திலும் மிகவும் பிரபலமடைந்த வீட்டுப்பாவனைக்குரிய பொருட்கள், தேயிலை முதலியன விற்பனை செய்வதற்கு தகுதி வாய்ந்த ஆண், பெண் இருபாலாரும் உடனே தேவை. 10-ந் திகதி முதல் காலை 9 மணிக்கும் மாலை 4 மணிக்குமிடையில் க. ஆழ்வாப்பிள்ளை, கந்தஉடையார் வளவு, பிரதானவீதி, புலோலி மேற்கு, பருத்தித்துறை (இ. போ. ச. டிப்போ அண்மையில்) என்னும் முகவரியில் விண்ணப்பபத்திரங்களுடன் நேரில் வரவும். 739

யாழ்ப்பாணத்திலுள்ள தனிப்பட்ட வைத்தியசாலையில் கடமையாற்றக் கூடிய இரு பெண்கள் தேவை. S. S. C. தேர்ச்சி பெற்றவர்கள் விண்ணப்பிக்கவும். பிணைப்பணம் ரூபா 1000/- சம்பளம் ரூபா 75 100 வரை. 15-3-69-க்கு முன்பாக விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 741 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 741

### விற்பனைக்கு

ஸ்ரீகாந்தா அச்சக வெளியீடு: 7-ம் வகுப்பு முதலாம் பருவ வழிகாட்டிக்கு அமைந்த மாதிரி வினாப்பத்திரம் கணிதபாடத்திற்கு வெளிவந்துவிட்டது. விலை 95 சதம். ஸ்ரீகாந்தா அச்சகம்-புத்தகசாலை, யாழ்ப்பாணம். 736

பரியாரி கமம் 6 ஏக்கர் எல்லை கிழக்கு வேலுப்பிள்ளை-சிதம்பரப்பிள்ளையின் ஆதனம் தெற்கு றோட்டு மேற்கும் வடக்கும் குளம் மாந்தை தெற்கு

## முல்லைத்தீவுப் பட்டினசபை
## கேள்வி விளம்பரம்

முல்லைத்தீவுப் பட்டினசபைத் தலைவரால் 1969-ம் ஆண்டு பங்குனி மாதம் 19-ந் திகதி காலை 10-30 மணி வரை பின்வரும் வேலைக்குச் சீல் வைத்த கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படும்.

| வேலையின் பெயர் | கேள்விப்பத்திரப்பணம் | கட்டுப்பணம் |
|---|---|---|
| 1. வெளிச்சவீட்டுஒழுங்கை வீதித்திருத்தவேலை. | 5.00 | 50-00 |

மேலதிக விபரங்கள் பட்டினசபைக் காரியாலயத்தில் அலுவல் நேரங்களில் கேட்டறிந்துகொள்ளலாம்.

ம. கூ. வஸ்தியாம்பிள்ளை,
தலைவர்,
பட்டினசபை, முல்லைத்தீவு.

1215

### அரசாங்கக் கேள்விகள்
கல்வித்திணைக்களம்

என். 4114-யா/கனிஷ்ட தொழில் நுட்பப் பாடசாலையில் தொழிலகம் அமைத்தல் சார்பாக கேள்விப்பத்திரங்கள் 28-3-1969 மு. ப. 10-30 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

முழு விபரங்கட்கு 7-3-1969 அரசாங்க வர்த்தமானியைப் பார்க்கவும்.
G. P. 2196

## கேள்விப் பத்திர அமைப்பு அறிவித்தல்

இதனடியில் காணப்படும் இரு வேலைகளுக்கும் 1969-ம் ஆண்டு பங்குனி மாதம் 24-ம் திகதி மு ப. 10-00 மணி வரையும் என்னால் கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விகள் யாவும் முறையே ரூபா 50-, 25- இச்சபைக் காரியாலயத்தில் பிணைப்பணமாகச் செலுத்தியதன் பேரில் இணைப்பிரதிகளாக 1969-ம் ஆண்டு பங்குனி மாதம் 23-ம் திகதி நண்பகல் 12.00 மணி வரையும் வழங்கப்படும் பத்திரத்திலேயே கேட்கப்படல்வேண்டும்.

மூலப்பிரதி எனக்கும், இணைப்பிரதி உள்ளூராட்சி உதவி ஆணையாளர் யாழ்ப்பாணம் அவர்கட்கும் ஒரே திகதியில் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும்.

மற்றைய வேண்டிய விபரங்களை இச்சபைக் காரியாலயத்தில் வேலைநாட்களில் நேரில் பார்வையிடலாம்.

### வேலைகள் விபரம்

1. குமரபுரம் தெரு அமைத்தல்.
2. கண்டாவளைக் கிணறு கட்டுதல்.

த. செல்வத்துரை,
அக்கிராசனர்,
கரைச்சிக் கிராமசபை.

கிளிநொச்சி,
6-3-69. 1214

### இ. ச. கட்டடம்பற்றி

## இன்றைய பலன்

சனிக்கிழமை
(8-3-69)
மாசி மாதம், 25 உ

திதி- சதுர்த்தி காலை 8-19 மேல் பஞ்சமி.
நட்சத்திரம்- சுவாதி இரவு9-57மேல் விசாகம்.
ராகுகாலம்- 9-25 10-55.
சுபநேரம்- 3-25—4-55.

இன்று பிறந்தவர்களுக்கு புதுத்தொழில் நலன்தரும். புண்ணிய விருப்பால் கண்ணியம் சேரும். உயர்கல்வி உயற்சிஉண்டு. கன்னிப் பெண்கள் எண்ணக் கவலை களிப்பைத் தரும். உத்தியாகத்தர்களுக்குஉயர்வு உண்டாகும். உடல்பிணி நீங்கும் நல்லாண்டாகும்.

மேஷம்- இதயத்தில் தென்றல், இல்லறச் சிறப்பு
ரிஷபம்- கவலையின் தாக்குதல், காரியம்கெடுதல்.
மிதுனம்- பிதாவழி பெருமை, பிறந்தக அழைப்பு.
கடகம்-போனபொருள் வரும், புதுமணம் பரப்பும்.
சிம்மம்- தாராளகுணம் தானியவிருத்தி.
கன்னி- போனதுவராது பொறுமையாய் இரு.
துலாம்- எண்ணத்தில் தடை, சுமைகள் அதிகம்.
விருச்சிகம்- வாக்குப் பலிதம், வரவும் நன்று.
தனுசு- அன்னிய நாட்டம், அலைச்சல் மிகுதி.
மகரம்- பாசத்தொடர்பு, நேசக்கர் இணைப்பு.
கும்பம்- மக்கள் நலன், மகிழ்ச்சிப் பெருக்கு.
மீனம்- நில்லாது பொருள் சொல்லாது

## விவேகானந்தசபை
## சைவசமயபரீட்சைமுடிவுகள்

கொம்பு விவேகானந்த சபையாரால் 1967-ஆம் ஆண்டு அகில இலங்கைச் சைவசமய பாடப் பரீட்சையில் கீழ்க்காணும்பாடசாலையிலுள்ள மாணவர் சில வித்தியாசாலைப் பரிசில்கள் பெறத்தகுதியுள்ளார்கள்.

மாணவர் ஒவ்வொருவருக்குமெதிரே கொடுக்கப்பட்டுள்ள இலக்கங்கள்- ஒவ்வொரு பிரிவைக் குறிக்கின்றனவாக அமைந்துள்ளன. 1. பாலர் பிரிவு-1 2. பாலர்பிரிவு-2 3. ஆரம்ப பிரிவு-1 4. ஆரம்ப பிரிவு-5 5. கீழ்ப்பிரிவு-1 6. கீழ்ப்பிரிவு-2 7. மத்தியபிரிவு 8. மேற்பிரிவு-1 9. மேற்பிரிவு-2)

கொ- இரத்மலானை இந்துக்கல்லூரி.
8 சே குமார்ஸ்கந்தராசா 9 தி வைகுந்தன்.

வெள்ளவத்தை சைவமங்கையர் வித்தியாலயம்
6 இ ஆனந்தராணி 8 ந திரிநயனி.

பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி.
3 ந கணேஸ்குமார் 4 பெ ஜெகதேவன் 5 மு கருபாலன்.

கொழும்பு றோயல் கல்லூரி
8 க சரவணபவானந்தன் 6 க தம்பிராசா

தெமட்டக்கொடை அரசினர் தமிழ் வித்தியாலயம்
3 க இராமநாதன் 4 ச கயம்புலிங்கம் 5 க பாலசுந்தரம் 7 ச இராசமணி

கொட்டாஞ்சேனை விவேகானந்தமகா வித்தியாலயம்
2 ம பூபாலரஞ்சனி 3 த இந்திரா 5 சி சித்திராதேவி 5 சே ஈஸ்வரமூர்த்தி 7 ம ஸ்கந்தராணி 8 வி சியாமா 9 சா ஸ்ரீஸ்கந்தராஜா

மத்துகம புனித மரியநாயகி கல்லூரி
9 மா கல்யாணி

அனுராதபுரம் விவேகானந்த தமிழ் மகா வித்தியாலயம்
8 இ கிருஷ்ணமணி

மாத்தளை பாக்கிய வித்தியாலயம்
6 வே [illegible] 6 பொ தேவ[illegible] 9 [illegible] நாகபூசணி

வத்தளை [illegible] இந்திரா [illegible] 6 தே இரகு சனி 7 பாக்கியம் 8 ந பரமேஸ்வரி 9 சோ கிருபாலினி

பதுளைசரஸ்வதிமகாவித்தியாலயம்
5 த ஜெயராமன் 9 சா மலையாண்டி

பதுளை சரஸ்வதி பிரதம பாடசாலை
3 மு இராசகுரு 4 து யோகமங்களம்

காரைதீவு மகாவித்தியாலயம் 5. சா கமலேஸ்வரி 6 க புனிதாதேவி 7 கு கலாநிதி க பரமேஸ்வரி 8. ம பாக்கியவதி 9. க புருதருதேவி திருமலர்.

கல்முனை இ கி ச பாடசாலை 3. கி நிரஞ்சலா 4. மு கதாசுரி 5. செ தயாளகுமாரி 9. பொ கணேசன்.

மட்-பெரியகல்லாறு மகா வித்தியாலயம் 5. ம விமலா தேவி.

மட்-பழுகாமம் இந்து பரிபாலனசபை 5. சி தட்சணமூர்த்தி 8. கு தருமவதி 9. சீ. சோமசூரியம்.

மட்-கல்லடி - உப்போடை சிவானந்த வித்தியாலயம் 9. வ தயானந்தராஜா.

மட்-கல்லடி - உப்போடை இ கி மி வித்தியாலயம் 2. வே மனோன்மணி சிகோசலா தேவி செ பாக்கியம் 3 ச திலகவதி 8 பொ சேதா.

மட்டக்களப்பு வின்சர் மகளிர் கல்லூரி 8. சி கோகிலம் 9. க ரஞ்சிதமலர்.

மட்-சித்தாண்டி இ கி மி வித்தியாலயம் 3. ந யோகேஸ்வரி.

மட்-வந்தாறுமூலை மத்திய மகா வித்தியாலயம் 5. சி விநாயகமூர்த்தி 6. த சண்முகராசா 7. ம இந்திராணி 8. க சுபத்திராதேவி 9. பூ தவமணி.

மட்-வந்தாறுமூலை அ த க பாடசாலை 2. க நல்லசேகரம்.

திருகோணமலை இ கி ச இந்துக்கல்லூரி 5 சி பிரபாகரன் 6. தெ கலாரூபன் 7 சி அமிர்தலிங்கம் சி அருந்தவம் 8. பூ ஜெயச்சந்திரன் 9. இ பாலேந்திரநாதன்

திருகோணமலை ஸ்ரீகோணேஸ்வர வித்தியாலயம் 3. 3. க தருமரெட்ணம் 4. வ ஸ்ரீஸ்கந்தராசா.

திருகோணமலை ஸ்ரீசண்முக வித்தியாலயம் 3. சா புவனஜோதி பா ஜெய

கரவெட்டி விக்கினேஸ்வரக் கல்லூரி 6 த செல்வச்ஜேன் 7. மு சிவசங்கரம்.

கரணவாய் தாமோதர வித்தியாசாலை 3. வ சண்முகலிங்கம்.

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் 6 ச யோகேஸ்வரி வி ஜெயராணி 7. வ தவராசா 9. சிறிதரன்.

நெல்லியடி மெ மி பாடசாலை. 3. ந விஜயராணி.

வதிரி தேவரையான் இந்துக் கல்லூரி 5. க சிவஞெளி 8. க பாலன் 9 வே சிவராசலிங்கம்

யா, புலோலி தெற்கு புற்றளை வித்தியாலயம்: 4 க இந்திரலிங்கம்

யாழ். புலோலி ஆண்கள் ஆங்கில பாடசாலை: 5. த சிவானந்தன் 6. க கனேந்திரன் 7. ச இராசசேகரன்.

பருத்தித்துறை வடமராட்சி இ து மகளிர் கல்லூரி: 3 வ நாகேஸ்வர நாயகி 4. தி பிரேமராஜன் 5. மு அருந்தவநாயகி 6. மு யோகரதி 7. மு இராஜேஸ்வரி 3. க புஸ்பராணி, த புஸ்பவதி 9. இ உருத்திர ராணி.

தும்பளை சைவப்பிரகாச வித்தியாசாலை: 3. சி. இராகவன் 4. மு கனகசபை 5. சு சாருமதி 6. நீ ஸ்ரீசுந்தரி 7. க இராதா.

பருத்தித்துறை மெதடிஸ் பெண்கள் உயர்தர பாடசாலை: 6. ந இராஜேஸ்வரி 7, கா பவானி 8. சி சிவயோகம் 9. சி மாலினி

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி: 5. பா பிரேமச்சந்திரா 6. க பிரம்நாத் 7. பா. சதானந்தன்.

உடுத்துறை சி சி த க பாடசாலை: 9. க நித்தியானந்தம்.

வல்வெட்டித்துறை சிவகுரு வித்தியாசாலை: 2. ஜேராதை 3. அ கிருஷ்ணமணி 4 பா பாலேந்திரா.

வல்வெட்டித்துறை அமிர்த க பாடசாலை: 3. வ

## புனிதவதி கொலை வழக்கு

# 'கோழிவெட்டப்போவதாகக்கூறிஎதிரிகத்தியை வாங்கிச் சென்றார்

# 6 பேர் வந்து கள்ளுக்குடித்தனர் எதிரிதான் காசு கொடுத்தார்'

## சீவல் தொழிலாளி சாட்சியம்

யாழ்ப்பாணம், சனி

''எதிரி மாயவன் எனது வீட்டிற்கு கள்ளு குடிக்க வந்தார். அவருடன் 5 பேர் வந்தனர். 6 போத்தல் கள்ளு வாங்கிக் குடித்தனர். எதிரி அதற்கு பணம் தந்தார். அதன்பின் எதிரி எனது கத்தியைத் தரும்படி கேட்டார். இரவு 7 மணிபோல் எதிரியிடம் கத்தியை கொடுத்தேன். மறுநாள் சீவலுக்குப்போகு முன், எதிரி வீட்டை கத்தி வாங்கப்போனேன். 'மாயத்தம்பி' 'மாயத்தம்பி' என்று கூப்பிட்டுப் பார்த்தேன். அவரைக்காணவில்லை. என் அத்தானின் கத்தியைவாங்கி அன்று சீவினேன்.''

புனிதவதிகொலை வழக்கில் சாட்சியமளித்த சீவல் தொழிலாளியான முருகன் கந்தசாமி மேற்கண்டவாறு கூறினார். இவ்வழக்கு வடபகுதி அசைஸ் கோர்ட்டில் நீதியரசர் வி. ரி. பண்டித குணவர்த்தன முன்னிலையில் நேற்று முன் தினம் விசாரணைசெய்யப்பட்டது.

கந்தசாமி சாட்சியமளிக்கையில் கூறியதாவது: எதிரியைஎனக்குத்தெரியும். அவர் என் வீட்டிற்குவந்து கள்ளுக்குடிப்பது வழக்கம். கோழி ஒன்று வெட்டப் போவதாக எதிரி என்னிடம் கத்தியைக் கேட்டார். நான் கத்தியைக் கொடுத்தேன். மறுநாள் சார்ஜன் தாமோதரம்பிள்ளை கத்தியைக் காட்டி கேட்டபோது அது என் கத்தி என்றேன்.

எதிரியின் வழக்கறிஞர் சாட்சியமளித்த கந்தசாமியை குறுக்குவிசாரணை செய்தார்.

வழ: உமது வீட்டில் உமது மனைவியும் இருக்கிறார்?- ஆம்.

வழ: குசினியில் கத்திகள் உண்டு?- ஆம்.

வழ: குசினியிலுள்ள கத்தியால்தான் கோழி இறை

வழ: இந்தக் கத்தி சீவலுக்கு தவிர வேறு வேலைக்கும் பாவிப்பதா?- இறைச்சிவெட்டப்பாவிப்பது.

வழ: கோழி வெட்டபாவிப்பதா?- ஆம்.

வழ: முன்பு இந்தக் கத்தியை வேறுயாருக்கும் கொடுத்திருக்கிறீரா?: ஆம்.

வழ: ஏன்?- ஆடுவெட்ட.

வழ: ஆடுவெட்டினால்கூர் மழுங்காதா? -ஆட்டின் தோலை வெட்டத்தான்.

வழ: சார்ஜன் தாமோதரம்பிள்ளை கத்தியை கொண்டு வந்து காட்டினார்? -ஆம்.

வழ: இன்ஸ்பெக்டர் டயஸ் வரவில்லை?- இல்லை.

வழ: கத்தியை வாங்கும் போது எதிரி என்ன சொன்னார்?- கத்தியைதான் கொண்டுவந்து தருவதாகவும், தவறினால், காலையில் வந்து வாங்கும்படி கூறினார்.

வழ: கள்ளுசீவ எதிரி வீட்டை தாண்டிப் போக வேணுமா?- ஆம்.

வழ: புளியடி அம்மாவை தெரியுமா?- தெரியாது.

வழ: சீவல் முடித்துத் திரும்பிவரும்போது இறந்தவர் வீட்டடியால்வந்தீரா?- ஆம்.

வழ: அதைப்பற்றி யாரையும் விசாரித்தீரா?- பொலிசார் பிடித்து விடுவார்கள் என்று நினைத்தேன்.

நீதியரசர்: பொலிசார் எதற்காகப் பிடிப்பார்கள்?- கள்ளுக்கொண்டு வந்தனன்.

வழ: எத்தனை போத்தல் கொண்டுவரலாம்?- இரண்டு போத்தல்.

நீதியரசர்: நீர் எத்தனை போத்தல் கொண்டுவந்தீர்?- கொஞ்சம் கூட..

நீதி: அப்படியானால் கொஞ்சத்தைக் குடித்துவிட்டுக் கொண்டுவந்திருக்கலாமே?- நான் கள்ளுக்குடிப்பதில்லை.

நீதி: போகும் பொழுது பொலிசார் நின்றனர்?- ஆம்.

நீதி: வரும்போதும் பொலி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சதம். ஸ்ரீகாந்தா அச்சகம்-புத்தகசாலை, யாழ்ப்பாணம். 736

பரியாரி கமம் 6 ஏக்கர் எல்லை கிழக்கு வேலுப்பிள்ளை-சிதம்பரப்பிள்ளையின் ஆதனம் தெற்கு ரோட்டு மேற்கும் வடக்கும் குளம் மாந்தை தெற்கு மாந்தை டிவிஷன், மன்னார் டிஸ்திறிக், வடமாகாணம். நல்ல விளைச்சலான காணி உடன் விற்க விரும்புகிறேன். நேரே தொடர்பு கொள்ளவும். S. S. பொன்னையா, வட்டுக்கிழக்கு, வட்டுக்கோட்டை. 735

## கல்வி

மோட்டார் மெக்கானிக் பாடங்கள். G. C. E. மாணவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க ஏப்ரல் மாதம் 16-ம் திகதி ஆரம்பமாகவிருக்கும் மோட்டார், டிராக்டர், டீசல் வாகன முழு நேர டிப்ளோமா வகுப்புகளுக்கு விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. சேர விரும்புவோர் உடன் விண்ணப்பிக்கவும். அன்றி நேரில் தொடர்பு கொள்ளவும். இத்துடன் லண்டன் A. M. I. A. M. E. பரீட்சைக்கும் மாணவர்கள் தயார் செய்யப்படுவார்கள். மற்றும் மெக்கானிக் பாட மாணவர்களுக்கு சிங்களமும் ஒரு பாடமாகப் போதிக்கப்படும். அதிபர், பிறின்ஸ் அகடமி, பொலிஸ் ஸ்ரேசன் வியூ, சாவகச்சேரி. 740

2. கணேட்டாவிகளைக் கண்டு கட்டுதல்.

த. செல்வத்துரை,
அக்கிராசனர்,
கரைச்சிக் கிராமசபை.
கிளிநொச்சி,
6-3-69. 1214

## கி. ச. கட்டடம்பற்றி கருத்துவேறுபாடு

அராலி, வெள்ளி

புதிய அராலி கிராமசபை தமது எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சோலை வரி அறவிடுதல் அறிவித்தலை அனுப்பிவைத்துள்ளது.

குழாய் நீர் வரியாக தமது ஆதனத்தின் வருடாந்த பெறுமதியின் 6 வீத பணத்தை செலுத்தவேண்டுமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிராமசபைக் கட்டடம் அமையவேண்டிய இடம் பற்றி அங்கத்தவர்களிடையே கருத்து வேறுபாடு இருந்ததால் கட்டடம் அமைக்கும் திட்டம் ஒருவருட காலத்திற்கு பின் போடப்பட்டுள்ளது.


ராதா மணிமார்க்

# சந்தனாதித் தைலம்

கூந்தல் உதிர்வதையும் இளநரையையும் தடுத்து, கூந்தலை நீண்டதாகவும், அடர்த்தியாகவும், பளபளப்பாகவும் வளரச் செய்யும்.

தினந்தோறும் தலையில் தேய்த்துவருவதனால் தலையிடி, கபாலஇடி, ஓயாத தும்மல், பீனிசம், கண்களிலிருந்து நீர் வடிதல், நித்திரையின்மை முதலிய சிரநேத்திர நோய்களைக் குணப்படுத்தும். அநேக விலை உயர்ந்த மூலிகைகளைச் சேர்த்துத் தயாரிக்கப்பட்ட ஓர் ஒப்பற்ற கூந்தல் தைலம்.

எங்கும் கிடைக்கும்

தயாரிப்பாளர்கள்:-

ராதா பெர்பியூமறி அன் ராதா புறடக்ஸ்
(Radha Perfumery & Radha Products)

ஏகவிநியோகஸ்தர்கள்:-

## எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி

(மருந்து, மருந்துச்சரக்கு, வாசனதிகள் இறக்குமதியாளர்களும் மொத்த, சில்லறை வியாபாரிகளும்.)

53, கே. கே. எஸ். ரோட், பெரியகடை, யாழ்ப்பாணம்.

''பாலேந்திரா பில்டிங்'' 160, செட்டியார் தெரு, கொழும்பு-11.

போன்: 541 Residence: 7068


விருச்சிகம்- வாக்குப் பலிதம், வரவும் நன்று.

தனுசு- அன்னிய நாட்டம், அலைச்சல் மிகுதி.

மகரம்- பாசத்தொடர்பு, நேசக்கர இணைப்பு.

கும்பம்- மக்கள் நலன், மகிழ்ச்சிப் பெருக்கு.

மீனம்- நில்லாது பொருள் சொல்லாது போகும்.

—சோதிடக்கலாநிதி
திருமலை வேலுப்பிள்ளை

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

(செய்திகள் காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.)

344 மீ. அன் 61 மீ.

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை, 6-40 கத்தோலிக்கநற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-30 குரல்வகை, 8-00 இசைவேளை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 மீ. அன் 49 மீ.

பகல் 12 00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

344 மீ. அன் 61 மீ.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 நேயர்விருப்பம்.

இரவு 6-15 பாட்டு, 6-45 பாவளம், 7-00 கிராமசஞ்சிகை, 7-30 முத்திநெறி, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 பேச்சு, 9-15 கதாப்பிரசங்கம் — வி. எஸ். ஞானசுந்தரம்.

## கொக்குவில் இந்து மாணவர்

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் பட்டின ஆசிரியர் சங்கம் நடத்திய பேச்சு சங்கீதபோட்டிமுடிவுகளில் வெற்றி பெற்ற கொக்குவில் இந்துக்கல்லூரி மாணவர்களின் விபரங்கள் ஈழநாட்டில் காரைநகர் இந்துக் கல்லூரி என்று வெளியாகியிருந்தது. இதில் வெற்றிபெற்ற கொக்குவில் இந்துக்கல்லூரி மாணவர் விபரம் வருமாறு:

சங்கீதம்:-

கீழ்ப்பிரிவு: [ஆண்கள்] ரி. திருகுமார் (பெண்கள்) எஸ். திவ்யகுமாரி, மேற்பிரிவு: (பெண்கள்) எஸ். சுப்புலட்சுமி.

சேர்ந்துபாடல்:- மேற்பிரிவு (பெண்கள்)

சாவகச்சேரி இந்துக் கல்லூரி, வேம்படி மகளிர் கல்லூரி கொக்குவில் இந்துக் கல்லூரி.

அனுராதபுரம் விவேகானந்த தமிழ் மகா வித்தியாலயம்

8 இ கிருஷ்ணமணி

மாத்தளை பாக்கிய வித்தியாலயம்

6 வே பரமேஸ்வரி 6 பொ தேவகி 9 மா நாகபூசணி

வத்துகாமம் சி சி தமிழ் கலவன் பாடசாலை

3 இ பரமேஸ்வரி

கண்டி இந்து சிரேஷ்ட பாடசாலை

9 அ சுந்தரவேற்பிள்ளை

கண்டிமத்திய மாகாண சைவமகாசபை

8 க மாலதி

அம்பிட்டிய பெவரெட்ஸ் கல்லூரி

9 மு செல்வராஜன்

கலகாபத்திரவதி மகாவித்தியாலயம்

7 ஆ சிவலிங்கம் 9 பொ புஷ்பராணி

நாவலப்பிட்டி கதிரேசன் குமாரமகாவித்தியாலயம்

1 கு சுரேஸ்குமார் 2 வி ஜெகதீசன் 3 ச பாலகிருஷ்ணன் 4 மு குமார் 5 இ பாலக்கிருஷ்ணன்

நாவலப்பிட்டி இந்து வாலிபர் சங்கம்

7 சோ பாலச்சந்திரன்

நாவலப்பிட்டி பரியந்திரேய மகளிர் மகாவித்தியாலயம்

3 வி வி மூக்கம்மாள் ந விஜயம்மாள் 7 சி இராஜரமணி க வள்ளியம்மா 9 க சிவகாமி

அட்டன் புனித கபிரியேல் மகளிர் கல்லூரி

8 து சரோசினி தேவி 7 மு இந்திரா, பெ மங்கையற்கரசி 8 ந மீனும்பாள் 9 க சத்தியபாமா

மஸ்கேலியா சரஸ்வதிகலாமன்றம்

5 செ விசுவலிங்கம்

டயகம மேற்கு தமிழ்க் கலவன் பாடசாலை

3 த விசுவநாதன் (உவந்தளிப்பு)

பொகவந்தலாவ ஹோலிரோசறி அ த க பாடசாலை

6 செ இராமசாமி, செ சரோஜா

பொகவந்தலாவ சென் மேரிஸ் அ த க பாடசாலை

3 க சிவகௌரி 5 சி சந்திரமோகன்

பூண்டுலோயா அரசினர் தமிழ் மகாவித்தியாலயம்

5 சி செல்வராஜ் (உவந்தளிப்பு) 8 பொ புவனேஸ்வரி

இருகலை அரசினர் தமிழ் மகா வித்தியாலயம்

5 ப செல்வராஜன் (உவந்தளிப்பு) 6 இ சந்திரகுமாரி 7 சி சிவசோதி 9 ப விஜயகௌரி

பதுளை தமிழ் மகளிர் கல்லூரி

1 ச ரவிச்சங்கர் 2 செ அனுசூயா 3 தி பவானி 4 வி வரதராஜன் 5 ஆ தவம் 8. பூ ஜெயச்சந்திரன் 9. இ பாலேந்திரநாதன்

திருகோணமலை ஸ்ரீகோணேஸ்வர வித்தியாலயம் 3. 3. க தருமரெட்ணம் 4. வ ஸ்ரீஸ்கந்தராசா.

திருகோணமலை ஸ்ரீசண்முக வித்தியாலயம் 3. சா புவனஜோதி பா ஜெயலக்ஷ்மி ம இந்திராணி 4 சி தவமணிதேவி 5. அ உமாராணி 6. க அம்பிகைவதனு 7 ச பவானி 8 ச கோணேஸ்வரி பா சிவஞானசுந்தரி 9. நா திருஞானலோசினி.

வவுனியா தமிழ் மகாவித்தியாலயம் 6. இ உமா 7. இ தெய்வானை 8. செ சர்வமங்களம் 9. செ வசந்தகுமாரி.

ஓமந்தை அரசினர் மகாவித்தியாலயம் 5 மூ புஷ்பராணி 6. க சிவநாயகி 7. மூ அரசரத்தினம் 9 கு ஞானவதி 8. ந தனஸ்காந்தர்.

புதுக்குடியிருப்பு மகா வித்தியாலயம் 3. த மகாலட்சுமி 5. இ கருணாகரன்.

கிளிநொச்சி மாகாவித்தியாலயம் 2. அ மோகனகுமார் 3 அ நந்தகுமார்.

பரந்தன் இந்துத் தமிழ்க் கலவன் பாடசாலை 1. க. கமலேஸ்வரி.

யா-உசன் இராமநாதன் மகா வித்தியாலயம் 3. ந சமோஜினி 5 சி ஜெயசீலன் 6. செ செல்வராசா 7. க தவமலர் 8. சி கருணாகர தேவி.

மீசாலை வடக்கு வீரசிங்கம் வித்தியாசாலை 3. இ புஷ்பராணி 4. க முருகதாசன் 5 ந பரமேஸ்வரி 7. க கார்த்திகேசு செ ஞானப்பிரகாசம் 9. சி இராசேஸ்வரி.

சாவகச்சேரி இந்துக் கல்லூரி 3. கு தேவமனோகரி 4. க செல்வநாதன் 7. ம சாந்தினி கு கோ கமலதாசன்.

சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி 5. இ நிர்மலாதேவி 6. அ இராதா 7. ரா மதியழகன் தி சிறிதரன் சோ மீனும்பிகை 9. வே சிவமலர் பொ சிவபூரணக்.

மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலயம் 3. க திலகவதி 5. சி யோகேஸ்வரி 7 ஆ சுந்தரலிங்கம் 8. கோ பத்மாஜனி 9. மு சுந்தரராசா.

மட்டுவில் வடக்கு சந்திரமௌலீச வித்தியாசாலை 3. த மீனலோசனி.

கைதடி விக்கினேஸ்வர வித்தியாசாலை 9. ஆ தளையசிங்கம்.

கைதடி சி எம் எஸ் ஆங்கில பாடசாலை 9. க மகேஸ்வரி.

வரணி மகாவித்தியாலயம் 5. மு நம்பிராசா 6. க சின்னுச்சிப்பிள்ளை 9. சி வேலாயுதபிள்ளை.

உடுத்துறை சி சி த க பாடசாலை: 9. க நித்தியானந்தம்.

வல்வெட்டித்துறை சிவகுரு வித்தியாசாலை: 2. ஜே ராதை 3. அ கிருஷ்ணமணி 4 பா பாலேந்திரா.

வல்வெட்டித்துறை அமித த பாடசாலை: 3. வ பிரேமவதனு.

(நாளை முடியும்)


இன்று மட்டும்
மானிப்பாய்
வெஸ்லி சினிமா
தினசரி 6-30, 9-30 மணி
பிரிபோயா, போயா 2-30 மணி
சிவாஜி - பத்மினி
நடித்த
தூக்குத் தூக்கி

54வது தினம்!
ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
10-30, 2-30, 6-30, 9-45
எம். ஜி. ஆர்-ஜெயலலிதா
மற்றும் பலர் நடித்த
ஒளி விளக்கு
(ஈஸ்ட்மென் கலர்)
(எஸ். ரி. ஆர். வெளியீடு)

வின்ஸர்
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர் - ஜெயலலிதா
நடித்த
குடியிருந்த கோயில்

இணுவில்
ஸ்ரீ காலிங்கன்
தினசரி 6-30, 9-30
பிரிபோயா, போயா 2-30
சிவாஜி - சாவித்திரி
நடித்த
படித்தால் மட்டும்போதுமா

MANOHARA
JAFFNA
Dailyat: 4-45, 7-00
& 9-45 p.m.
Pre-poya, Poya 10-30 a.m.
Warren Beatty
in
BONEIEAND CLYDE
(Aduts only) (Techni color)

REGAL at Jaffna
Daily at 4-45, 7-00 & 9-45, p.m
Rita Tushingham &
Oliver Reed
n
THE TRAP
(Adults)


மியை குறுக்குவிசாரணை செய்தார்.

வழ: உமது வீட்டில் உமது மனைவியும் இருக்கிறார்?- ஆம்.

வழ: குசினியில் கத்திகள் உண்டு?- ஆம்.

வழ: குசினியிலுள்ள கத்தியால்தான் கோழி இறைச்சி வெட்டுவதுண்டு?- அன்று கோழி இறைச்சி சாமைக்கவில்லை.

வழ; குசினியில் சமையலுக்கும் இந்தக் கத்திதான் பாவிப்பதா?- ஆம்.

வழ: வேறு கத்தி இருக்கிறதா?- அருவாள் இருக்கிறது ஓலைவெட்டும் கத்தியுமுண்டு.

கொஞ்சம் கூட...

நீதி: அப்படியானல் கொஞ்சத்தைக் குடித்துவிட்டுக் கொண்டு வந்திருக்கலாமே?- நான் கள்ளுக்குடிப்பதில்லை.

நீதி: போகும் பொழுது பொலிசார் நின்றனர்?- ஆம்.

நீதி: வரும்போதும் பொலிசார் நிற்பார்கள் என்று தெரியும் தானே?- ஆம்.

வழ: அந்த வழியால் ஏன் வந்தீர்?- கொஞ்சம்தான் கூடக் கொண்டுவந்தேன்.

வழ: தேவதாஸை தெரியுமா?- தெரியாது.

(4:ம் பக்கம் பார்க்க)


ராணி
(யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்.
சிவாஜி கணேசன்
மாலினி
நடித்த
சபாஷ் மீனு

இங்ஸ்லி



பிளாஸா
வெம்பிளி
(கண்டி)
ஸ்ரீகிருஷ்ணு
(திருமலை)
வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)
மற்றும்
சினிமாஸ்திரைகளில்

சிவாஜிகணேசன்
கே. ஆர். விஜயா
முத்துராமன்,
எல். விஜயலக்ஷ்மி,
நாகேஷ், குமாரிசச்சு
இன்னும் பலர் நடித்த
ஸ்ரீதரின் மகோன்னத
ஈஸ்ட்மென்
கலர்ப் படைப்பு



ஊட்டிவரை உறவு
இசை: விஸ்வநாதன் பாடல்கள்: கவிஞர்கண்ணதாசன்

அத்துடன் காண்பிக்கப்படுகிறது யாழ் வெலிங்டன் திரையில்

மு. கருணாநிதியின் விமர்சனத்துடன்
S S. வாசன்
அவர்களால்
ஈஸ்மன்கலரில்படமாக்கப்பட்டு சென்னையில் நடைபெற்ற
இரண்டாவது அனைத்துலக தமிழ் ஆராய்ச்சிமகாநாட்டு கோலாகல காட்சியையும்



மற்றும்
மக்கள் திலகம் எம். ஜி. ஆர். - அறிஞர் அண்ணு ஆகியோர் இம்மகாநாட்டில் சொற்பொழிவாற்றுவதையும் பார்க்கலாம்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பீகிங்கில் மிகப்பெரிய ரஷ்ய எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்

## சீன ராணுவத்தினரும் கலந்து கொண்டனர்

பீகிங், மார்ச் 7

பீகிங்கிலுள்ள சோவியத் தூதரகத்தின் முன் இதுவரை ஒரு போதும் நடைபெருத அளவு மிகப் பெரிய ஆர்ப்பாட்டத்தை சீனர்கள் நேற்று நடத்தினர்கள். இந்த ஆர்ப்பாட்டங்களில் ராணுவம், கடற்படை, விமானப்படையினரும் கலந்துகொண்டது குறிப்பிடத்தக்கது.

பீகிங்கில் இதுவரையில் இத்தனை பெரிய ஆர்ப்பாட்டம் நடைபெற்றதில்லையென்று கூறப்படுகின்றது. ஆயிரக்கணக்கான சீனர்கள் ரஷ்யத் தூதரகத்தை நோக்கி ஆர்ப்பாட்டம் செய்துகொண்டு போனர்கள். சோவியத் யூனியனுக்கு எதிராகக் கோஷங்கள்கிளப்பப்பட்டன. இந்த ஆர்ப்பாட்டங்களில் ராணுவத்தினரும் கலந்துகொண்டனர்.

சோவியத் யூனியனுக்கும் சீனுவுக்குமிடையில் ஏற்பட்டுள்ள இந்தத்தகராறு இன்னும் மோசமானகட்டத்தை எட்டக்கூடும் என்று இந்த ஆர்ப்பாட்டங்களைப் பார்த்தவர்கள் கூறுகிருர்கள்.

ஆர்ப்பாட்டம் மிகப்பெரியதாக இருந்த போதிலும் அசம்பாவிதச் சம்பவம் எதுவும் அறிவிக்கப்படவில்லை.

இதே போன்று நேற்று முன்தினம் செங்காய் மாகாணத்திலும் பெரிய ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

இதிலும் ராணுவத்தினர் கலந்துகொண்டனர். சீனுவின் பல பாகங்களிலும் நேற்று நாலாவது நாளாக சோவியத் எதிர்ப்புஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன. சோவியத் தலைவர்களுக்கு எதிராகக் கிளர்ந்து எழும்படி சோவியத் மக்களை சீனத்தலைவர்கள் கோரி வருகின்றன.

# மானங்கெட்ட முறையில் பாத்தியதை கோருகிறதாம்

## சீனப் போக்கு பற்றி 'டாஸ்' கண்டனம்

மாஸ்கோ, மார்ச் 7

எல்லை மோதல்பற்றிய சோவியத் குறிப்பு பற்றி சீனர்கள் தெரிவித்துள்ள மறுப்பு குறித்து 'டாஸ்' பின்வருமாறு குறிப்பிட்டுள்ளது:

சோவியத்-சீன எல்லையில் நடைபெற்ற ஆயுதமேந்திய ஆத்திர மூட்டலையொட்டிய சோவியத் அரசாங்கத்தின் அறிக்கைக்குப் பதிலாக, குற்றச்சாட்டுகளை மறுத்துஉரைக்கும் நோக்குடனும், நடைபெற்ற அட்டூழியங்களுக்கான பொறுப்பிலிருந்து நழுவியோடும் நோக்குடனும் முற்றிலும் ஆதாரமற்ற குறிப்பு ஒன்றினைச் சீன அதிகாரிகள் பீகிங்கில் வெளியிட்டுள்ளனர்.

டாடக் கோரும் வகையிலான சீன அதிகாரிகளின் பதில் குறிப்பு, மார்ச் 2-ம் திகதி நடைபெற்ற ஆத்திரமூட்டல் நிகழ்ச்சி தற்செயலானதல்ல என்பதையும், வேருனதொரு அம்சம் அல்ல என்பதையும் மீண்டும் உறுதிப்படுத்தி விட்டது சீன-சோவியத் உறவுகளைச் சீரழிக்கும் நோக்குடன் அதிசூரத்தனப் போக்கினைச் சீனத் தலைவர்கள் கடைப்பிடிக்கத் தொடங்கிய அந்த கணம் தொட்டு சோவியத் சீன எல்லையில் சீனத் துருப்பினரால் இடையருது ஆத்திரமூட்டல் நிகழ்ச்சிகள்மேற் கொள்ளப்பட்டு வந்திருக்கின்றன. பிந்திய நிகழ்ச்சிகள் நிரூபிக்க பிர...

மேற்கொள்ளும் பாதையில் இறங்கினர்.

சோவியத் பிராந்தியத்தினுள் ஆயுதமேந்திய ஊடுருவலை மேற்கொண்டதை அடுத்து நாட்டில் குறுகிய தேசியவாத வெறியினைச் சீன அதிகாரிகள் மேலும் கிளறி விட்டுள்ளனர். பீக்கிங்கிலும் இதர பட்டினங்களிலுமுள்ள சதுக்கங்களிலும், வீதிகளிலும் சோவியத் விரோதக் கோஷங்களும், பயமுறுத்தல்களும் எழுப்பப்படுகின்றன. சீனக் கம்யூனிஸ்ட்கட்சியின் 8-வது காங்கிரஸில் எடுக்கப்பட்ட தீர்மானங்களை புறக்கணித்து முடக்குவதற்கும், அதிசூரத்தன, தீவிர இனவாத மேடையில் தமது அகாவாள...

மாணவர்—பொலிஸ்மோதலில்

# 6 பேர் பலி

கராச்சி, மார்ச் 7

பாகிஸ்தானின் வடமேற்கு எல்லை ஓரத்தில் மாணவர்களுக்கும், பொலிஸாருக்குமிடையில் ஏற்பட்ட மோதல்களில் குறைந்தது ஆறுபேர் கொல்லப்பட்டதாகவும் ஏராளமானவர்கள் காயமடைந் திருப்பதாகவும் ஜனநாயக செயற் கமிட்டியைச் சேர்ந்த ஒரு பிரமுகர் தெரிவித்துள்ளார்.

மாணவர்கள் பொலிஸ் நிலையமொன்றுக்குத் தீமூட்ட முயன்றபொழுது பொலிஸார் சுட்டதாகவும், அதன் காரணமாகவே இந்த மரணங்கள் சம்பவித்ததாகவும் கூறப்படுகின்றது. மாணவர்கள் தரப்பில் துப்பாக்கிப்பிரயோகம் செய்யப்பட்டதில் ஒரு பொலிஸ் அதிகாரியும் கொலையுண்டதாகத் தெரிகின்றது.

இதற்கிடையில் மாணவர்கள் விடுத்துள்ள 11 அம்சக் கோரிக்கையை ஏற்றுக்கொள்ளும்படி எட்டு எதிர்க்கட்சிகளின் ஜனநாயக செயற் கமிட்டி, அயூப் அரசை வற்புறுத்தியுள்ளது. பத்தாந் திகதி நடைபெறவிருக்கும் வட்டமேசை மகாநாட்டில் சமர்ப்பிப்பதற்கான கருத்துக்களை ஆராய்வதற்காக ஜனநாயக செயற்கமிட்டி தொடர்ந்து பல கூட்டங்களை நடத்தியுள்ளது.

மாணவர்களின் கோரிக்கைகளை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளும்பட்சத்தில் வட்டமேசை மகாநாட்டில் தாமும் கலந்துகொள்வது பற்றித் தாம் ஆலோசிக்கத் தயாராயிருப்பதாக எதிர்க்கட்சி முக்கிய தலைவர்களில் ஒருவரான மவுலானு பாசானி கூறியுள்ளார்.

வட்டமேசை மகாநாட்டில் சிறுபான்மையோருக்கும் இடமளிக்கவேண்டும் என்று அவர் கூறியுள்ளார்.

தமிழ் நாட்டில்

# என். சி. சி. க்கு பதில் புதிய திட்டம்

## கருணாநிதி தகவல்

சென்னை, மார்ச் 7

தேசிய கெடெற் படைக்குப் பதில் மாற்றுத்திட்ட வேலைகள் ஜூன், ஜூலை மாதங்களில் ஆரம்பிக்கப்படுமென்று தமிழக முதல்வர் திரு. மு, கருணாநிதி சட்டசபையில் அறிவித்தார்

என். சி. சி. க்கு பதிலாக வேறு மாற்றுத் திட்டம் எப்போது வரும் என்று தி. மு. க. உறுப்பினர் திரு. மலைச்சாமி கேட்ட கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையிலேயே திரு. கருணாநிதி இத்தகவலைக் கூறினர். திட்டத்தை ஆரம்பிப்பதற்காக ...

... கொடுக்காவிட்டாலும்இந்த மாற்றுத்திட்டம் அமுலுக்குக் கொண்டுவரப்படும் எனக் கூறிய திரு. கருணாநிதி என். சி. சி. பில் இந்திச் சொற்களைத்தான் வைக்கவேண்டும் என்று மத்திய அரசு கோரியிருப்பது உண்மையென்றும், அந்தக் கோரிக்கையை ஏற்பதற்கில்லையென்றும் தெரிவித்தார்.

இம்மாற்றுத் திட்டத்தின்மூலம் தமிழக மாணவர்களுக்கு ராணுவ வேலைவாய்ப்பு பாதிக்கப்படுகின்ற பட்சத்தில், அப்படிப் பாதிக்கப்...

## அண்ணாவுக்கு அஞ்சலி

வெள்ளவத்தை, வெள்ளி

''காலத்தால் அழியாத கலைத்தமிழ்த் தேரைக்கட்டியெழுப்பிவிட்டு அமரராகிவிட்ட அறிஞர் அண்ணாவைத் தமிழ்கூறும் நல்லுலகத்தில் இன்றுபோற்றுதார் இல்லை. அவர் தொடக்கிவைத்த தி. மு. கழகத்தின் பெயரை இலங்கையில் எமது தி. மு. கழகமும் கொண்டிருப்பதால் இலங்கையில் உள்ள சில வகுப்பு வாதிகள் எமது கழகத்தை தடைசெய்ய வேண்டும் என்று கூச்சல் போடுகிறுர்கள். அமரர் அண்ணாவின் சமாதான மனப்பான்மையையும் பண்பான நடுநிலைமைக்கொள்கைகளையும் அறிந்தவர்கள் அவரதுகழகத்தைத் தூற்ற மாட்டார்கள். அண்ணாவைப் பாவித்து அரசியல் லாபம் சம்பாதிக்கப் பலர் முனைகின்றனர்.''

இவ்வாறு இ. தி. மு. க. வைச் சேர்ந்த திரு. இளஞ்செழியன் கொழும்பு தெமட்டக்கொடை தமிழ் வளர்ச்சி மன்றம் நடாத்திய அமரர் அண்ணா நினைவுக்கூட்டத்தில் பேசுகையில் கூறினர்.

திரு. சத்தியசீலன் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் செல்வி சந்திரபிரபா மாதவன், கம்பனைதாசன், தியாகி பாரதமுத்து, கே. கெங்காதரன், வெற்றிவேந்தன், நெடுமாறன், எம். வி. பாலன் ஆகியோருட்பட இன்னும் பலர் உரையாற்றினர்.

## ஆசிரிய மணிக்கு பாராட்டு

உடும்பராய், வெள்ளி

''நமது நாட்டின் கல்விக்கு முதுகெலும்புபோல் அமைந்தவர்கள் ஆசிரியர்கள். ஆசிரியர்களின் நலனுக்கு அகில இலங்கைத் தமிழாசிரியர் சங்கமும், வட இலங்கைத் தமிழாசிரியர் சங்கமும் பல்லாண்டுகளாகச் செய்து வரும் பணிக்கு முன்னேடிகளாக இருந்து உழைத்தவர்களுள் ஆசிரியமணி திரு. நா. தம்பிரத்தினம், எல்லா வகையான பண்பாடுகளும் ஒருங்கே நிறையப் பெற்றவர். அவரது சேவையைப் பாராட்டவேண்டியது நமது முக்கிய கடமைகளுள் ஒன்ருகும்.''

ஆசிரியமணி திரு. நா. தம்பிரத்தினத்தினது உபசார விழாச் சபைக்குத் தலைமைவகித்துப் பேசிய வட இலங்கைத் தமிழாசிரியர் சங்கத் தலைவர் பண்டிதர் ச. பொனுத்துரை மேற்கண்டவாறு குறிப்பிட்...

# தமிழ்மறைத் தேர்வில் சான்றிதழ் பெறுவோர்

யாழ்ப்பாணம், சனி

சென்ற வருடம் செப்டம்பர் மாதம் தமிழ் மறைககழகம் நடத்திய அகில இலங்கைத் தமிழ் மறைத்தேர்வுக்குத் தோற்றித் தக்க திறமை காட்டிச் சான்றிதழ் பெறுவோர் பெயர்களைக் கீழே காண்க. பெயர்களுக்கு முன்னுள்ள இடங்கள் தேர்வு நடைபெற்ற இடங்களாகும். ஒவ்வொரு பிரிவிலும் முதலாம் வகுப்பில் தேறியவர்களுடைய பெயர்களுக்குப் பின் அடைப்புக் குறிக்குள் (மு இடப்பட்டுள்ளது

### மத்திய பிரிவு

உரும்பிராய்: கு. குலஞானவதி (மு), ந. கமலாதேவி, ந. பிரபுதேவன்.

கண்டி (புசலாவ): த. சந்திரசேகரன் (மு), ச. செல்வமணி (மு), எஸ். இஸ்மாலிகா, (மு), பா. தவமணி (மு).

அட்டன்: மு. பரமானந்தம் (மு), சி. முனுசாமி(மு), பெ. வனஜா (மு), சி. ரட்ணமாலா (மு) க. வசந்தா(மு), க. ஜெயகுமாரி (மு), க. இராசேஸ்வரி (மு), அ. புஸ்பம், இ. யோகேஸ்வரி.

கிளிநொச்சி; பெ. வேலுச்சாமி (மு), மா. திருக்குமாரன் (மு), சி. சின்னராசா, ந. பத்மலோசனி, மு. நடனவதி.

சுன்னுகம்: சி. ஞானலோசனி (மு), க. மோகனபுஸ்பம் (மு), த. யோகேஸ்வரி (மு), சி. பரமேஸ்வரி, வை. வத்சலா, க. விமலாதேவி.

நீர்கொழும்பு: இ. சோமாஸ்கந்தன்.

பளை: சி. அன்னமுத்து(மு), சி. பரிமளம் (மு), க. செல்வராணி.

பூனகரி: கா. மகேஸ்வரி (மு), இ. மகேஸ்வரி.

முரசுமோட்டை: க. மகேந்திரராணி (மு), பொ. மகாதேவா.

### கீழ்ப்பிரிவு

உரும்பராய்:- கு. குலரஞ்சிதவதி, ச. பாரதிதேவி.

கண்டி (புசல்லாவ):- வீ. சாரதாதேவி (மு), இரா. நாகேஸ்வரி (மு), ச. மரியாய் (மு), இரா. சந்திரலேகா (மு), த. ஜோன் (மு), சி. சுந்தரலிங்கம்(மு), மு. நிரஞ்சலாதேவி, ச. சரோஜா.

அட்டன்:- வை. அருணசலம் (மு), மு. ரெங்கராஜன் (மு), பெ. சக்கரவர்த்தி (மு), வை. மனேகரன் (மு), கி. கோமதி(மு), ...

சி. சபாநாதன், கு. பாலேந்திரன், ந. ஜெயராசன், மு. கணேசன், செ. தவராசா, இ, திலகவதி, ச. நிர்மலாதேவி, சி. விஜயராணி, சி. சிவஞானதிருமால், ந. ஜெயகுமாரி, க. சிவகுமார். இ. வேலீசன், சோ. சுசீலாதேவி.

கொழும்பு:- மு. வசந்தி (மு), க. நாகேஸ்வரன் (மு), இ. விஜயலட்சுமி (மு), இ. மேகநாதன், மு. சிவகுமார். இ. விஜயலட்சுமி, க. சுகந்தி, க. இராசேஸ்வரன், ஏ. முத்துக்குட்டி.

சுன்னுகம்:- சோ. கிஷ்ணநந்தி (மு), கோ. மைதிலி (மு), சி. ரூபிணி.

நீர்கொழும்பு:- க. காஞ்சனு.

பரந்தன்:- பெ தயாநிதி (மு), மோ. மோகனேஸ்வரி, ந. கோமளா, செ. மல்லிகாதேவி, செ. அஞ்சலாதேவி, சு. இந்திராதேவி.

பூநகரி:- க. நாகேந்திரன், க சிவராசா, ஐ. சந்திரமதி, ச. நளாயினி, வே. புவனேஸ்வரி, செ. சரஸ்வதி.

மாத்தளை:- க. இராசேஸ்வரி (மு), செ. தனலட்சுமி (மு), வே. இராசகனிவைலட், மா. சரஸ்வதி.

முரசுமோட்டை:- இ. இளங்கோ (மு).

யாழ்ப்பாணம்:- க. உதயகுமார் (மு). (ந. நி.)

## கிராம மக்கள் மனதில்பதிந்தவர்

காரைநகர், வெள்ளி

காரைநகர் ஆயிலி சிவஞானேதய வித்தியாசாலையில் 38 ஆண்டுகள் ஆசிரியராகச் சேவைசெய்து இளைப்பாறிய ஆசிரியர் திரு. ந. அம்பலவாணருக்கு மேற்படி வித்தியாசாலையில் காரைநகர் இந்துக்கல்லூரி அதிபர் திரு. ஆ. தியாகராசா தலைமையில் பிரிவுபசார வைபவம் நடாத்தப்பட்டது. தலைமையாசிரியர் வரவேற்புரை நிகழ்த்தினர்.

வட்டாரக் கல்வி அதிகாரி திரு. ச. சபாரத்தினம், யாழ்ப்பாண இந்துக்கல்லூரி அதிபர் திரு. என். சபாரத்தினம், டாக்டர் வி. சிவசோதி, ஆசிரியர் திரு. அ. சடாட்சரம் ஆகியோர் பாராட்டுரைகள் வழங்கினர்.

திரு. அம்பலவாணர் 38 ஆண்டுகள் சேவை புரிந்தது, பாடசாலைக்கே ஒரு பெருமையென்றும், நல்ல ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிக்கைக்குப் பதிலாக, குற்றச்சாட்டுகளை மறுத்துஉரைக்கும் நோக்குடனும், நடைபெற்ற அட்டூழியங்களுக்கான பொறுப்பிலிருந்து நழுவியோடும் நோக்குடனும் முற்றிலும் ஆதாரமற்ற குறிப்பு ஒன்றினைச் சீன அதிகாரிகள் பீகிங்கில் வெளியிட்டுள்ளனர்.

மானங்கெட்ட முறையில் சோவியத் பிராந்தியத்தின் மீது பாத்தியதை கொண்டன் அதிசூரத்தனப் போக்கினைச் சீனத் தலைவர்கள் கடைப்பிடிக்கத் தொடங்கிய அந்த கணம் தொட்டு சோவியத் சீன எல்லையில் சீனத் துருப்பினரால் இடையறாது ஆத்திரமூட்டல் நிகழ்ச்சிகள்மேற் கொள்ளப்பட்டு வந்திருக்கின்றன. பிந்திய நிகழ்ச்சிகள் நிரூபித்த பிரகாரம், சீன அதிகாரிகள் அபாயகரமான ஆத்திரமூட்டல் நடவடிக்கைகளை...லும், வீதிகளிலும் சோவியத் விரோதக் கோஷங்களும், பய முறுத்தல்களும் எழுப்பப்படுகின்றன. சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் 8-வது காங்கிரஸில் எடுக்கப்பட்ட தீர்மானங்களை புறக்கணித்து முடக்குவதற்கும், அதிசூரத்தன, தீவிர இனவாத மேடையில் தமது ஆதரவாளர்களை அணிதிரட்டுவதற்குமான ஆயுதமாக மாசேதுங் குழுவினர் நவீன சோவியத் விரோத இயக்கத்தைப் பயன்படுத்துகின்றனர்.

வியட்நாம்

# அமைதிப்பேச்சு இடையில்நின்றது

வாஷிங்டன், மார்ச் 7

வடவியட்நாமுக்கு அமெரிக்க அதிபர் திரு. நிக்ஸன் விடுத்த எச்சரிக்கையை அமெரிக்க பாதுகாப்புஅமைச்சர் திரு. லெயார்ட் மீண்டும் வலியுறுத்தியிருக்கிறார்.

தென்வியட்நாம்மீதுதொடர்ந்துரொக்கட் தாக்குதல்களை நடத்துவதன்மூலம் அமெரிக்காவின் பொறுமையை அதிகம் சோதிக்க வேண்டாம்என்றுலெயார்ட் எச்சரித்துள்ளார்.

வியட்காங்கியர் தொடர்ந்து ரொக்கட்தாக்குதல் நடத்தினால் அமெரிக்காதிருப்பியடிக்கும் என்று திரு. நிக்ஸன் ஏற்கனவே எச்சரிக்கை விடுத்திருந்தார்.

நேற்று பாரிஸில் ஆரம்பமான வியட்நாம் அமைதிப் பேச்சுக்கள் இடைநடுவில் நிறுத்தப்பட்டன. தென்வியட்நாம்மீது வியட்காங்கியர் நடத்தும் ரொக்கட்தாக்குதலைக்குறிப்பிட்டு பேச்சுக்களை நிறுத்தும்படி தென்வியட்நாம் பிரதிநிதி கேட்டுக் கொண்டார்.

தென்வியட்நாமிலிருந்து அந்நியர்கள் வெளியேற வேண்டும் என்றும், அங்குள்ள இப்போதையஅரசை நீக்கவேண்டுமென்றும் வடவியட்நாம் பிரதிநிதி குறிப்பிட்டார்.

தென்வியட்நாமில் இடம் பெறும் சம்பவங்களினால் ஏற்படும் விளைவுகளுக்கு கம்யூனிஸ்ட்டுகள்தான்பொறுப்பேற்கவேண்டுமென்றுஅமெரிக்க தலைமைப் பிரதிநிதி திரு. கபொட்லாஜ் குறிப்பிட்டார்.

இதற்கிடையில் பாரிஸ் பேச்சுக்களில் தென்வியட்நாம் ஆலோசகராகக்கலந்து கொள்ளும் உப ஜனாதிபதி கா-ஓ-கீ தாயகம் திரும்பியுள்ளார். அமைதியில் வடவியட்நாம் அக்கறைகாட்டவில்லையானால் தாம் நாட்டுக்காகப் போராடத் தாயகத்திலிருக்கப்போவதாக அவர் கூறினார்,

## பிரான்சில் மீண்டும் பெரிய வேலை நிறுத்தம்?

பாரிஸ், மார்ச் 7

பிரஞ்சு அரசுக்கும், முதலாளிகள், தொழிற்சங்கத் தலைவருக்குமிடையில் சம்பள உயர்வு சம்பந்தமாக நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் முறிந்துவிட்டன. இதனால் பிரான்ஸில் கம்யூனிஸ்ட் சார்புள்ள மிகப் பெரிய தொழிற்சங்க சம்மேளனம் அடுத்த செவ்வாய்க்கிழமை 24 மணிநேர வேலைநிறுத்தம் ஒன்றை நடத்தவிருக்கின்றது.

இந்த வேலைநிறுத்தத்துக்குப் பிரான்ஸிலுள்ள மின்சாரத் தொழிலாளர்களும் ஆதரவு தெரிவித்துள்ளனர்.

தொழிலாளர்களின சம்பள உயர்வுக் கோரிக்கைகள் ஏற்கப்பட்டால் பிரஞ்சு நாணயத்தின் மதிப்புக் குறைக்கப்படவேண்டி ஏற்படுமென்று அரசாங்கம் கருதுகின்றது. ஆனால் பிரஞ்சு 'பிராங்' நாணயத்தின் மதிப்பு குறைக்கப்படமாட்டாதென்று அதிகாரிகள் கூறினார்கள்.

இந்த வேலைநிறுத்தம் அதிபர் டிகாலுக்குப் பெரிய பிரச்னைகளை ஏற்படுத்தக் கூடுமென்று கருதப்படுகின்றது. சில காலத்திற்கு முன் பிரான்ஸில் ஏற்பட்ட நெருக்கடிகள் மீண்டும் தோன்றக்கூடுமென்று சிலர் கருதுகிறார்கள்.

## கருணாகரன் விடுதலை

திருவனந்தபுரம், மார்ச் 7

கைது செய்யப்பட்டிருந்த கேரள சட்டசபை காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த எதிர்க்கட்சித்தலைவர் திரு. கருணாகரனும் 30 பேரும் விடுதலை செய்யப்பட்டனர்.

கேரள அரசுதனது ஆண்டு விழாவைக் கொண்டாடும் வேளையில் துரோக தினம் கொண்டாடும்படி கோரி இவர்கள் கூட்டம் நடத்த விருந்தனர். தடை உத்தரவை மீறியதாக இவர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர்.

தீ வைப்பு வழக்கு

## பிணையில் 10 பேர் விடுதலை

சென்னை, மார்ச் 7

கடந்த டிசம்பர் மாதம் 25-ம் திகதி கீழ்வெண்மணிக் கிராமத்தில் நடைபெற்ற தீ வைப்புச் சம்பந்தமாகக் கைதுசெய்யப்பட்டவர்களில் 10 பேர் நிபந்தனையுடன் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

தங்களைப் பிணையில் விடுதலை செய்யக்கோரி இவர்கள் அனுப்பியிருந்த மனுவில் தாங்கள் நிரபராதிகள் என்றும், அரசியல் கருத்து வேறுபாடு காரணமாகவே தாங்கள் இந்த வழக்கில் சம்பந்தப்படுத்தப் பட்டிருப்பதாகவும் கூறியிருந்தனர்.

## விவசாயிகளுக்குக் கூடுதலான கடனுதவி

கொழும்பு, வெள்ளி

விவசாயிகளுக்கான கடன் தொகையை மக்கள் வங்கி அதிகரித்துள்ளது. மூவாயிரம் ரூபாயிலிருந்து ஐயாயிரம் ரூபாயாக இந்தக் கடனுதவி அதிகரிக்கப்பட்டுள்ளது.

தொழிலாளர்களுக்கு வீடுகள் திருத்துவதற்கு கடனுதவியாக 5 ஆயிரம் ரூபாயை மக்கள் வங்கி வழங்கும்.

...என்.சி.சி.க்கு பதிலாக வேறு மாற்றுத் திட்டம் எப்போது வரும் என்று தி.மு.க. உறுப்பினர் திரு. மலைச்சாமி கேட்ட கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையிலேயே திரு. கருணாநிதி இத்தகவலைக் கூறினார். திட்டத்தை ஆரம்பிப்பதற்காக ஒரு குழு இப்போதே அமைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் சொன்னார்.

மத்திய அரசு உதவிப் பணம் கொடுத்தாலும் ... உண்மையென்றும், அந்தக் கோரிக்கையை ஏற்பதற்கில்லையென்றும் தெரிவித்தார்.

இம்மாற்றுத் திட்டத்தின்மூலம் தமிழக மாணவர்களுக்கு ராணுவ வேலைவாய்ப்பு பாதிக்கப்படுகின்ற பட்சத்தில், அப்படிப் பாதிக்கப்படக்கூடாது என்ற முயற்சியில் எதிர்க்கட்சித் தலைவர்களையும் ஒத்துழைக்க வருமாறு முதல்வர் அழைப்பு விடுத்தார்.

பம்பாய் கலவரம்

## சிவசேனைத்தலைவர் மீது சட்டநடவடிக்கை

புதுடில்லி மார்ச் 7

தடுப்புக்காவல் சட்டத்தின்மீது இப்போது காவலில் வைக்கப்பட்டிருக்கும் சிவசேனைத் தலைவர் பால் தாக்கரே மீது நடவடிக்கை எடுக்கப்படுமென மகாராஷ்டிர முதலமைச்சர் திரு வி. பி. நாயக் தெரிவித்தார்

மந்திரி சபைக் கூட்டமொன்றின் பின் பத்திரிகை நிருபர்கள் மத்தியில்பேசிய முதலமைச்சர் திரு நாயக் சிவசேனைத் தலைவரின் பேச்சுக்கள் அவரது செயல்கள் தனது சகாக்களுக்கு அவர் விடுத்த கட்டளைகள் ஆகியவற்றைக் கொண்டு இந்த நடவடிக்கை எடுக்கப்படும் எனச் சொன்னார்.

அண்மையில் நடந்த பம்பாய்க் கலவரங்களின் போது கைது செய்யப்பட்டவர்கள்மீதும் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படுமெனக் கூறிய திரு நாயக் தடுப்புக் காவல் சட்டத்தின்கீழ் சிறையிருக்கும் பால்தாக்கரேயை விடுதலை செய்வது என்ற பேச்சுக்கே இடமில்லையெனக் குறிப்பிட்டார்.

# "உணவு உற்பத்தி நமது கடமை"

திருக்கோணமலை, வெள்ளி

''எமது நாட்டின் பொருளாதார சுபீட்சத்திற்கு மூலாதாரமாகிய உணவுப் பொருட்கள் பற்றாக்குறையில் இருந்தமை சகலரும் அறிந்ததே. இந்நிலையில் எமது நாட்டுக்கு நாம் செய்யவேண்டிய கடமைகளில் மிக முக்கியமானதும் இன்றியமையாததும் உணவு உற்பத்தியே. இதை மனதிற் கொண்டுதான் நான் ஒரு முழுநேர விவசாயியாக மாறினேன்.''

இவ்வாறு திருக்கோணமலை மாவட்டத்தின் ஆறு காரியாதிகாரிப் பிரிவுகளிலுமிருந்து தெரிவுசெய்யப்பட்ட விவசாய மன்னர்களுள் ஒருவரான திரு. சிவபுண்ணியம், திருகோணமலை பொருட்காட்சியை ஆரம்பித்து வைத்து பேசுகையில் குறிப்பிட்டார். திருகோணமலை சிங்கள மகாவித்தியாலயத் திடலில் நடைபெற்ற விவசாயப் பொருட்காட்சியின் போது, திறந்த ஜீப்பொன்றில் 5 விவசாய மன்னர்கள் ஊர்வலமாக வந்து திடலை அடைந்தனர். திருக்கோணமலை பாராளுமன்ற உறுப்பினர் திரு. சு. ம. மாணிக்கராஜா மாவட்ட அரசாங்க அதிபர் திரு. சோமபால குணதீரா, மாவட்ட உதவி அரசாங்க அதிபர் யாவரும் இவ்விவசாய மன்னர்களுக்கு மாலை அணிவித்து வரவேற்றனர். இதைத்தொடர்ந்து சாரண இளைஞர்கள் 5 தீப்பந்தங்களை ஏந்திய வண்ணம் கம்பத்தைச் சுற்றி வந்து விவசாய மன்னர்களிடம் கொடுக்க அவர்கள் திடலின் மையத்திலுள்ள கம்பத்தின் உச்சியில் தீப்பற்றவைத்தனர்.

விவசாயப்பகுதி, மீன்பிடிக் கூட்டுத்தாபனப்பகுதி, கைத்தொழிற் பகுதி, கூட்டுறவுப் பகுதி போன்று பல இன்னோரன்ன பகுதிகளும் இப்பொருட்காட்சியில் பங்கு கொண்டு தமது பொருட்களைப் பார்வைக்கு வைத்திருந்தபோதிலும் விவசாயப் பகுதியில் மின்சாரத்தினால் இயங்கும் பசு என்ற தலைப்பில்செயற்கைப்பசு ஒன்றை மின்சாரம் கொண்டு இயக்கிய காட்சி எல்லோரையும் கவர்ந்தது.

...முக்கிய கடமைகளுள் ஒன்றாகும்.''

ஆசிரியமணி திரு. நா. தம்பிரத்தினத்தினது உபசார விழாச் சபைக்குத் தலைமைவகித்துப் பேசிய வட இலங்கைத் தமிழாசிரியர் சங்கத் தலைவர் பண்டிதர் ச. பொ னுத்துரை மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

பாராட்டு விழாச் செயலாளர் திரு. அ. பஞ்சாட்சரம் பண்டிதர் சி. சா. தம்பையா திரு. இ. துரைசிங்கம் ஆகியோரும் பேசினர்.

ஆசிரியமணி திரு. நவரத்தினது சேவையை பாராட்டி விரிவான முறையில் வருகிற 11ந் திகதி யாழ்ப்பாண ஆசிரியர் சங்கக் கந்தோர் மண்டபத்தில் ஓர் உபசார விழாவை நடத்துவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

## கி. ச. மின்சாரம் வழங்கும்

அராலி, வெள்ளி

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரிக்குச்சொந்தமான மின் இணைப்புகளை வட்டுக்கோட்டை கிராம சபை ரூபா 18000 கொடுத்து வாங்குவதென்று அண்மையில் நடைபெற்ற கிராம சபைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. இதுவரை காலமும் கல்லூரி சுற்றாடலில் உள்ள வீடுகளுக்கு யாழ்ப்பாணக்கல்லூரி மின் வசதிசெய்து கொடுத்திருந்தது. ஆனால் வருகிற மாதம் முதலாந்திகதியிலிருந்து வட்டுக்கோட்டை கிராம சபை தனது பொறுப்பில் யாழ்ப்பாணக்கல்லூரிக்கு மின்சாரம் வழங்கும்.

## பாலம்மூட கோரிக்கை

யாழ்ப்பாணம், சனி

பூநகரி-கேரதீவு சங்குப்பிட்டிக் கடலின் ஒரு பகுதியையாவது மூடுவதற்கு ஒழுங்கு செய்யவும் என்று கேட்டுக் கொள்ளும் கடிதமொன்றைச் சக்தி கிராமமுன்னேற்றச் சங்கத் தலைவர் திரு. கே. தனபாலசிங்கம் தபால் தந்தி மராமத்து மந்திரி திரு. மொண்டே குஜயவிக்கிரமாவுக்கும். கிளிநொச்சி எம்.பி. பண்டிதர் கா.பொ. இரத்தினத்திற்கும் அனுப்பி வைத்துள்ளார்.

கடலை மூடுவதற்கு அத்திபாரக்கல் நாட்டி இரண்டு வருடங்களாகியும்இதுவரை மூடப்படாமலிருப்பது அரசாங்கத்தின் சோம்பேறித்தனத்தைக் காட்டுகின்றதென்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ந.நி)

...லேகா (மு), த. ஜோன் (மு), சி. சுந்தரலிங்கம்(மு), மு. நிரஞ்சலாதேவி, ச. சரோஜா.

அட்டன்:- வை. அருணாசலம் (மு), மு. ரெங்கராஜன் (மு), பெ. சக்கரவர்த்தி (மு), வை. மனோகரன் (மு), கி. கோமதி(மு), வி. ஜெயவர்மன், இ. புஷ்பலீலா, பொ. பாலச்சந்திரா, த. புஷ்பராணி, பெ. சகுந்தலாதேவி, ந. நிர்மலா தேவி, சி. கலையரசி.

காத்தான்குடி:- தா. கோவிந்தராசா (மு), ந. மோகனதாஸ் (மு).

கிளிநொச்சி:-பெ. வேலுச்சாமி (மு), மா. திருக்குமாரன், செ. தவமணிதேவி(மு), சோ. இரதிதேவி, ஆ. தனலட்சுமி, மு. பழனியம்மா, க. கருணாகரன், மு. நித்தியானந்த மூர்த்தி, கு. ஜெகநாதன், சி. செல்வராணி.

கேகாலை:- வை. அருட்செல்வம்.

கொழும்பு:- மு. அசோகன், ந. மங்களேஸ்வரி, ந. குமாரிகௌரி, மு. வசந்த கோகிலம், க. கனகாம்பாள், கி வசந்தா.

சுன்னாகம்:- சி. ஜெயமணி (மு), ச. இராம்பிகை, க. உமாதேவி.

நீர்கொழும்பு:- இ. சரோஜினி (மு), மு. தங்கம்மா (மு), தே. ஞானசுந்தரி, பகவதி (மு), க. சாந்திமலர்.

பரந்தன்:- ந. இராமநாதன், ப. கந்தசாமி,

பளை:- தா. தர்மராஜசிங்கம் (மு).

**கீழ்ப்பிரிவு தொடர்ச்சி**

பூனகரி; க. சற்குணகுமாரி (மு), தா. ஞானேஸ்வரி, ந. அமிர்தலிங்கம், கா. புஸ்பநாதன், வே. பராசக்தி.

முரசுமோட்டை: ந. நாகலட்சுமி (மு) சு. கௌரி.

**தொடக்கப் பிரிவு**

உரும்பராய்: மா. பிரபாகரன் (மு), ந. இராமதேவன் (மு), ந. நிர்மலா (மு), ந. நிருபன் (மு), க. கௌரி (மு); க. நாகேஸ்வரி (மு), த. நிர்மலாதேவி (மு), இ. நளாயினி (மு), க. சிவகுமாரன் (மு), பா. தேவபாலன், மா. மதிவதனி, ச. மகேசன்.

கண்டி (புசல்லாவ): இ. சரோஜனி (மு), சு. இராசேஸ்வரி (மு), வை. சாரதா (மு), யெ. ரொமிலா

அட்டன்; இ. சுமதி (மு), அ சகுந்தலா (மு), இ திலகவதி (மு), வை. சோதி, செ. கமலாதேவி, க. தேவகியம்மா.

கிளிநொச்சி: வே. இராசேந்திரம் (மு), ந. பிரதாபன் (மு), சு. பாக்கியம் (மு), க. சிறீரஞ்சினி (மு), அ. மேரி அமிர்தநாயகி (மு), ஆ. பரமேஸ்வரி (மு),

...தினம், டாக்டர் வி. சிவசோதி, ஆசிரியர் திரு. அ. சடாட்சரம் ஆகியோர் பாராட்டுரைகள் வழங்கினர்.

திரு. அம்பலவாணர் 38 ஆண்டுகள் சேவை புரிந்தது, பாடசாலைக்கே ஒரு பெருமையென்றும், நல்ல பண்புகள் நிறைந்த ஆசிரியராக அவர் விளங்கி, மாணவரிடத்தும், பெற்றோரிடத்தும், கிராமத்திலும் நன்மதிப்புப் பெற்றுவிட்டாரென்றும், அதனாலேயே பலரது மனத்தில் இடம் பிடித்துக்கொண்டு விட்டாரென்றும் பாராட்டு வழங்கப்பட்டது.

வடமராட்சியில்

## திருட்டு அதிகரிப்பு

புலோலி, வெள்ளி

நெல்லியடியில் சில நாட்களாகச் சைக்கிள் களவு அதிகரித்துள்ளது. புலோலி, துன்னாலை, பருத்தித்துறை ஆகிய பகுதிகளில் இக்களவு அதிகரித்துள்ளதாக தெரிய வருகிறது. நெல்லியடிச் சந்தியில் சில தினங்களுக்கு முன் பூட்டி வைத்துவிட்டு, கடையில் பொருட்களை வாங்கிவந்தவரது சைக்கிளைக் காணாது அதிர்ச்சியடைந்தார்.

நெல்லியடியில் கடை வைத்திருக்கும் ஒருவரின் 300 ரூபா பெறுமதியான சைக்கிளும் தமது கடைக்கு முன்பாக வைத்திருந்த பொழுது இனந்தெரியாத நபர்களால் களவாடப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

## ந.ச. தலைவரை ஏசினாராம்

சாவகச்சேரி, வெள்ளி

சாவகச்சேரி நகரசபைத் தலைவரை அவதூறாக ஏசியதாகவும் அவரைத் தாக்கி அவமானம் உண்டுபண்ணியதாகவும் சாவகச்சேரி நகரசபை அங்கத்தவர் ஒருவர் மீது சாவகச்சேரி மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சாவகச்சேரி நகரசபைத் தலைவர் திரு. சு. கனகரத்தினத்தை அவதூறாக ஏசி அடித்ததாக நகரசபை அங்கத்தவர்களில் ஒருவரான திரு. என்.கே. தருமலிங்கம் என்பவர்மீது குற்றஞ்சாட்டிச் சாவகச்சேரிப் பொலிசாரால் தொடரப்பட்ட இவ் வழக்கு நேற்று சாவகச்சேரி மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராசா முன்னிலையில் எடுக்கப்பட்டபோது எதிரி சுகயீனம் காரணமாக கோர்ட்டிற்கு வராததால் விசாரணை ஒத்திவைக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணி வாக்கு

'புத்தகம் படிப்பதினின்று ஞானம் வராது. அதுவாகவே நம்முள்ளத்தில் தோன்றவேண்டும். நூல்களைப் படிப்பது ஓரளவு உதவும். அவ்வளவே சில சமயம் படிப்பானது ஞானம் உதயமாவதற்குத் தடையாகவும் இருக்கும்'.

—மகாத்மா காந்தி


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 389,

யாழ்ப்பாணம், கீலக வருஷம் மாசிமாதம் 25-ந் திகதி
(8 - 3 - 69)


## மக்களும் பொலிசாரும்

அடுத்த மாத முற்பகுதியில் பொலிசார் "மரியாதை வட்டாரம்" அனுஷ்டிக்கவிருக்கின்றனர். இதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகின்றன. ஒருவருடத்தில் ஒரு வாரத்தில் மட்டும் மரியாதை செலுத்துவதற்காகக் காத்திராமல் வருடம் முழுவதிலும் மரியாதை செலுத்துவார்களென நம்புவோம்.

ஒருவரையொருவர் புரிந்துகொள்ள முடிந்தால்தான் மரியாதைக்கு இடமிருக்கும். ஒருவரை யொருவர் புரிந்துகொள்வதற்குத்தான் மொழி ஏற்பட்டது. ஒருவர் பேசும் மொழியை மற்றவர் புரிந்து கொள்ள முடியாவிட்டால் அங்கு மரியாதைக்குப் பதில் அவமரியாதைதான் ஏற்படும். பொலிசாருக்கும் பொதுமக்களுக்குமிடையில் சில இடங்களில் சில சந்தர்ப்பங்களில் மோதல் ஏற்பட்டதற்கு மொழிப்பிரச்னையே பெரிதும் காரணமாக இருந்திருக்கிறது. அந்நிய ஆட்சிப காலத்தில், மக்களை அடக்கி ஒடுக்கவும் பயமுறுத்தவும் பொலிஸ் படையும் உபயோகிக்கப்பட்டது. நமது நாடு சுதந்திரமடைந்துவிட்டபோதிலும் இந்த அந்நிய ஆட்சிக்காலத்திலிருந்த அதே மனப்பான்மை இன்னும் இங்கிருந்து முற்றாக நீங்கவில்லை. இதற்கு அரசியல் ஆதிக்கப்போட்டி காரணமாக சிறுபன்மையினர் விஷயத்தில் ஆட்சியிலுள்ளோர் நடந்து வந்துள்ளதையும் கூறலாம். என்றாலும் தமிழ் பேசும் மக்கள் பெரும்பான்மையாக வாழும் வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு தமிழ்மொழி நன்கு தெரிந்த பொலிசாரையும் சிங்கள மக்கள் பெரும்பான்மையாக வாழும் தென்னிலங்கைப் பகுதிகளுக்கு சிங்களம் நன்கு தெரிந்த பொலிசாரையும் கடமையாற்ற நியமிப்புகள் மூலம் பொதுமக்

காணலாம். சிங்களம் தெரியாத பொலிசாரை சிங்களப் பகுதிகளுக்கும், தமிழ் தெரியாத பொலிசாரை தமிழ்ப் பகுதிகளுக்கும் அனுப்புவதனால், அவர்கள் அடையும் கஷ்ட, நஷ்டங்கள் அவர்கள் மனதில் வெறுப்புணர்ச்சியைத் தூண்டி விட்டு அந்த ஆத்திரத்தை சந்தர்ப்பம் கிடைக்கும் போது பொது மக்கள் மீதுதான் தீர்த்துக் கொள்ளச் செய்யும். இது மனித இயல்பு.

"இலங்கையில் சாரதிகள், வயர்லஸ் இயக்குநர், மற்றும் துறைகளையும் சேர்ந்தோர் உட்பட பொலிஸ் சேவையில் பத்தாயிரத்து ஐநூற்று முப்பத்தெட்டுப் பேர்தான் உள்ளனர் அதாவது ஆயிரம் மக்களுக்கு ஒருவர்தான் பொலிஸ்காரர் இது போதாது. பொலிஸ்சேவைக்காக இலங்கைப்பிரஜைஒருவர் ஒரு நாளைக்குசுமார்ஒருசதம்தான் செலவிடுகிறார். நீதிமன்றங்களில் பொலிசார் வழக்குத் தொடர்ந்து குற்றவாளிகளாகக் காணப்படுவோர் அபராதம் செலுத்துவதன்மூலம் இந்தச் செலவுத் தொகையும் குறைந்துவிடுகிறது". என்று உதவிப் பொலிஸ் சுப்பிரிண்டென்ட் ஒருவர் வானொலியில் உரை நிகழ்த்துகையில் தெரிவித்திருந்தார்.

பொதுமக்களுக்குப் பாதுகாப்பளிக்கும் பொலிசாருக்காக பொதுமக்களின் பணம் குறைவாகச் செலவிடப்படுவதையிட்டுப் பொது மக்கள் திருப்தியடையலாம், ஆனால் பொலிசார் திருப்தியடைய முடியாது. அவர்களுக்குப் போதிய வருமானம் இல்லை. வீட்டுவசதிமற்றும் வாழ்க்கை வசதிகளும் குறைவு. இதனால் அவர்கள் அதிருப்தியுடன் தான் வாழ நேரிடுகிறது. அதிருப்தி கொண்டவர்களிடம் மரியாதையை வருடத்தில் ஒரு வாரத்தில் கூட எதிர்பார்க்க முடியுமா?

நிர்வாக மொழிக் கருத்தரங்கு

# "தமிழிலபதில் எழுதவேண்டியது மத்திய அரசாங்கத்தின் கடமையாகும்

## சம அந்தஸ்தினல்தான் மொழிப்பிரச்னை தீரும்"

— திரு. ஆ. துரைராஜசிங்கம் - உதவி மேயர் —

திரு விஸ்வநாதன் கொண்டுவந்த பிரேரணையில் இரு விடயங்கள் உண்டு முதலாவது, யாழ்ப்பாண மாநகர சபையின் நிருவாக மொழியாகத்தமிழ் மொழி இருக்க வேண்டும் என்பதாகும். இது ஏற்கனவே நடைமுறையில் இருப்பதாகும். இவ் விடயத்தைத் திரும்பவும் வலியுறுத்த திரு விஸ்வநாதன் விரும்பியிருந்தால் அதில் யாரும் எவ்வித ஆட்சேபமும் தெரிவிக்கத் தேவையில்லை. நான் இதற்கு நிச்சயமாக எதிர்ப்புத் தெரிவிக்க மாட்டேன்.

### சிங்கள மொழி பெயர்ப்பு

பிரேரணையிலுள்ள இரண்டாவது விஷயம் மத்திய அரசாங்கத்துடன் தமிழில் தொடர்பு கொள்வதுடன் அதன் சிங்கள மொழி பெயர்ப்பையும் இணைத்தல் வேண்டும் என்பதாகும். இந்த அம்சம் ஜனநாயகக் கொள்கைகளுக்கும் சோஷலிசக் கோட்பாடுகளுக்கும் மாறுபட்டது என்றதனல் நான் பிரேரணையை எதிர்த்தேன்.

நாட்டு மக்களின் மொழிகளில் நாட்டின் ஆட்சிநடைபெற வேண்டும். இலங்கையில் சிங்களம், தமிழ் ஆகிய இரண்டும் ஆட்சி மொழிகளாக இருக்க வேண்டும் தமிழ் இன்றும் இலங்கையின் அரசகரும மொழியாகவில்லை. தமிழையும் ஓர் அரசகரும மொழியாக்க வேண்டும் என்ற இயக்கமும் போராட்டமும் நடைபெறும் ஒரு கால கட்டத்தில் நாம் இருக்கிறோம்.

### தமிழில் பதில் வேண்டும்

ஓர் உள்ளூர் ஆட்சி மன்றம் மத்திய அரசாங்கத்துடன் தமிழில் தொடர்பு கொண்டு தமிழில் பதில் பெறும் உரிமையுடையதாக இருக்க வேண்டும். ஓர் உள்ளூர் ஆட்சி மன்றம் மத்திய அரசாங்கத்திடமிருந்து தமிழில் பதில் கோருவது

தொடர்பாகும். தமிழ் பேசுபவர் ஒருவர் எழுதும் தமிழ்க் கடிதத்திற்கு சிங்களத்தில் பதிலும், தமிழில் மொழிபெயர்ப்பும் அரசாங்கம் அனுப்பினல், இனிமேல் அவர் தனது தமிழ்க்கடிதத்திற்கு சிங்கள மொழி பெயர்ப்பையும் அனுப்பவேண்டும் என்பது திரு. விஸ்வநாதனின் வாதமா? தமிழை நிர்வாக மொழியாகக் கொண்ட யாழ்ப்பாணம் மாநகரசபை மத்திய அரசாங்கத்துடன் தமிழில் தொடர்பு கொண்டு தமிழில் பதில் பெறும் உரிமையை நிலைநாட்டவேண்டும்.

### சிங்கள வரியிறுப்பாளர்

மாநகரசபை எல்லைக்குள் வாழும் சிங்கள வரியிறுப்பாளர் மாநகரசபைக்கு சிங்களத்தில் கடிதம் எழுதினல் அவருக்கு சிங்களத்தில் பதில் எழுதவேண்டும். (மொழி பெயர்ப்பு அல்ல) என்று திரு. விஸ்வநாதன் கூறுவாராயின் அதை நான் பூரணமாக ஆதரிக்கிறேன். அல்லது சிங்களத்தை நிர்வாக மொழியாகக்கொண்ட இன்னேர் உள்ளூராட்சி மன்றம் சிங்களம், தமிழ் ஆகிய இருமொழிகளிலும் எம்முடன் தொடர்புகொண்டால் நாமும் அவ்வாறு பதில் அளிக்கவேண்டும் என்று கூறினல் அதில் கருத்துண்டு அதை விடுத்து மத்திய அரசாங்கத்துடன் தமிழில் தொடர்புகொள்ளும் பொழுது சிங்கள மொழி பெயர்ப்பு வேண்டும் என்பது சிங்கள வகுப்பு வாதத்திற்கு தாசராக விளங்குவதாகும்.

### சம அந்தஸ்து

தான் இப்பிரேரணையைக் கொண்டுவந்தது மொழிப்பிரச்னையைத் தீர்க்கவும் தேசிய ஐக்கியத்தை நிலைநாட்டவும் என திரு. விஸ்வநாதன் கூறுகிறார். இந்நாட்டில் [illegible] தமிழும் [illegible] பெற்ற ஓர் அரசகரும மொழியாகச் சட்டப்படி

வாதி என்று சொல்வதற்கே அருகதையற்றவராவர்.

தான் ஒரு 'தமிழன்' என்ற அடிப்படையில் இப்பிரேரணையைக் கொண்டு வந்ததாக திரு. விஸ்வநாதன் கூறுகிறார். தனிச் சிங்களச் சட்டத்தை ஏற்று நிற்கும் தமிழ்க்காங்கிரஸ், தமிழரசுத் தலைவர்களும் 'தமிழர்'கள்தான். எனவே தமிழன் என்பதில் ஒன்றும் தங்கிநிற்கவில்லை. என்னைப் பொறுத்தவரையில் இப்பிரச்னையை சோஷலிஸ கண்ணேட்டத்தில் பார்க்கிறேன்

தமிழ்காங்கிரஸ், தமிழரசுக்கட்சி செய்யும் பிழைகளைப்பற்றியும் திரு. விஸ்வநாதன் கூறுகிறார். அவர்கள் செய்யும் பிழைகள் போதாதென்று 'தமிழன்' திரு விஸ்வநாதனும் பிழையான பாதையில் போகவேண்டுமா?

இறுதியில் தமிழரின் பழம்பெருமை பற்றியும் திரு. விஸ்வநாதன் கூறுகிறார். பெருந்தன்மை பற்றிப பேசி, ஒத்துழைப்பு என்று கூறி ஒவ்வொரு உரிமையையும் இழந்த நிலைக்கு தமிழ்பேசும் மக்களைக் கொண்டுவந்த தமிழ்த்தலைவர்களின் பாதையில் திரு. விஸ்வநாதனும் செல்ல விரும்பினல், அவர் செல்லட்டும், தமிழ் பேசும் மக்கள் செல்லத் தயாராக இல்லை.

—

### திருட்டு

வல்வெட்டித்துறை, வெள்ளி

தொண்டமானறு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக்கடை கூரை ஓட்டைப் பிரித்து கள்வர்கள் உட்புகுந்து பலரூபா பெறுமதியான பொருட்களை களவாடிச் சென்றுள்ளனராம். இதுபற்றிய விசாரணை செய்த பொலிசார் கைவிரல் அடையாளங்களையும் எடுத்துச் சென்றுள்ளனர்.

— —

### மணிஓடர் மாற்றமுடியாத கந்தோர்

பண்டத்தரிப்பு, வெள்ளி

இளவாலை உபதபாற் கந்தோரில் மணிஓடர் மாற்றுவதில் மக்கள் அதிக சிரமப்படுகின்றனர் பத்துப் பன்னிரண்டு நாட்களுக்கு முன் அனுப்பப்பட்ட மணிஓடர்களுக்குக்கூட இங்கு பணம் கொடுபடவில்லையாம்.

பண்டத்தரிப்பு பெரிய தபாற் கந்தோரிலிருந்து குறிப்பிட்ட ஒருதொகைப் பணம் மாத்திரமே இங்கு அனுப்பப்படுவதால் இங்கு இவ்வித கஷ்டம் நிலவி வருவதாகக் கூறப்பட்டது. தந்தி மணிஓடர் ஓய்வுப் பணம் என்பனவற்றிற்குன்னாத்திரமே பணம் கொடுக்கப்படுகிறதாம்.

—

### விரைவில் மின்சாரம்

அராலி, வெள்ளி

மின்சாரம் வழங்கும் திட்டத்தின்கீழ் அராலி வடக்கு குறிச்சிக்கும், வட்டுக்கோட்டை கிராமிய ஆஸ்பத்திரிக்கும் மின் கம்பி இணைப்பு வேலைகளை அரசாங்க மின்சாரப் பகுதியினர் ஆரம்பித்துள்ளனர்.

இவ்வாண்டு நடுப்பகுதியில் இப்பகுதிகளுக்கு மின்சாரம் கிடைத்துவிடுமென எதிர்பார்க்கப்படுகிறது.

### மலேரியா மறைகிறதாம்

பம்பலப்பிட்டி, வெள்ளி

டீ. டீ. ரி. மலேரியாவைத் தடைசெய்ய மாட்டாது என்ற பொதுமக்களின் கருத்துக்கு முரணாக இன்று டீ. டீ. ரியே மலேரியாவைத் தடுக்கக் கூடியதாகவுள்ளதென மலேரியாத்தடுப்பியக்கத்தின் சுப்பிரிண்டன் டாக்டர் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். வரண்டபிரதேசத்திலுள்ள அனுராதபுரப் பகுதியில் முறைக்குமுறை ஏற்பட்ட டீ. டீ. ரி. தெளிப்பியக்கங்களினல் மலரியா பெருமளவு தடுக்கப்பட்டுள்ளது. கடந்த சில மாதங்களாக வரண்ட பகுதிகளிலிருந்து எடுக்கப்பட்ட புள்ளி விபரத்தின்படி சிகிச்சை பெறுவோரின் எண்ணிக்கை 50 வீதம் குறைந்துள்ளதாக டாக்டர் விக்கிரமசிங்கி குறிப்பிட்டுள்ளார்.

### 7,000 பேர் பார்வையிட்டனர்

உடுப்பிட்டி, வெள்ளி

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியில் மூன்று தினங்களாகத் தொடர்ந்து நடைபெற்ற விஞ்ஞானக் கண்காட்சியை யாழ்ப்பாணப்பகுதியிலிருந்து கல்லூரி மாணவர்களும் மாணவிகள் வந்து பார்வையிட்டனர். சுமார் 7000 பேர் இதைப் பார்வையிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

மகாவலியைத் திசைதிருப்ப

## சுரங்கவழி அமைப்பு பூர்த்தியாகும் கட்டம்

அனுராதபுரம் வெள்ளி

மகாவலி கங்கை திசை திருப்புத் திட்டத்தின் மிகக் கஷ்டமான பகுதி பொல்கொல்லயில் அமையும் சுரங்கப்பகுதியாகும். இப்பொழுது இந்தக் சுரங்கநிர்மான வேலை முடிவடையும் தறுவாயிலுள்ளது. இதுமுடிவடைந்ததும் மகாவலியின் ஒரு பகுதி காலவீவாவுக்கும்இன்ஞெருபகுதி கந்தலாமவுக்கும் திருப்பப்படும்.

நூற்றுக்கணக்கான சிறிய குளங்களும் திசவிவ, நற்சருவா நுவரவீவா போன்ற பெரிய குளங்களும் நீரை பெறும் நுவரவீவாவுக்கு அளிக்கப்படும் நீர் அப்பகுதியிலுள்ள தண்ணீர் பிரச்னையை நீக்கி புதிய நகரம் முழுவதிற்கும் விநியோகிக்கப்படுவதோடு நீர்ப்பாசனத்துக்கும் பயன்படும் இந்த மகாவலி திட்டத்தினல் 42,000 ஏக்கர் மேலதிக

# ஐயாறன் எழுதுகிறார்

யாழ்ப்பாணம் இன்னும் தூங்குகிறது என்று இங்கு வந்திருந்த இந்திய ஹைகமிஷனர் கண்டேவியா என்னிடம் தெரிவித்தார். இதை விளக்கும்படி கேட்டதற்கு பத்து வருடங்களுக்கு முன் தாம் இங்கு வந்தபோது இருந்தபடிதான் இந்நகரம் இருக்கிறதென்றும், அபிவிருத்திஒன்றும் காணவில்லை என்றும் சொன்னர்.

யாழ் மேயர் அவருக்குப் பொதுசன நூல்நிலையத்தில் அளித்த ஒரு தேநீர் உபசாரத்தின்போதுதான் அவரைச் சந்தித்துப் பேசினேன் அந்த நூல்நிலையக் கட்டடமே பத்து வருடங்களுக்குள் புதிதாக ஏற்பட்டதென்றும், அதுவும் அபிவிருத்திதானே என்றேன்.

இவ்வித இரண்டொரு புதிய பெரிய கட்டடங்களைத் தவிர இங்கு விசேஷ அபிவிருத்தியையும் காணவில்லை என்றும் மின்சார சப்ளை, கைத்தொழில், ரஸ்தாக்கள் முதலியவை எல்லாம் முன் இருந்தபடிதான் இருக்கிறதென்றும் கூறினர் இதை யார்தான் மறுக்க முடியும்?

0 0 0

இப்படித் தூங்கும் யாழ்ப்பாணத்தை, எப்படி யார் தட்டி எழுப்புவது? இதற்காகத்தான் பல நகரபிதாக்களையும் தெரிவு செய்து அனுப்பியிருக்கின்றேம். நகரைப் பலவிதங்களிலும் அபிவிருத்திசெய்ய வேண்டியது அவர்களது கடமை.

ஆனல் அவர்களிடையே விரும்பத்தக்க ஒற்றுமையும் ஒத்துழைப்பும் இல்லையென்றும் முன்போல் போட்டிகள் இருப்பதாகவும் கேள்விப்பட்டேன். மிக வருத்தமாகவும், ஏமாற்றமாகவும் இருந்தது.

ஒரே ஒரு பெண்மணிதான் சபையில் இன்று மெம்பராகப் பதவி வகிக்கிருர். முன்னர் ஒரு பெண்கூட இல்லாதிருந்தது. இப்போது ஒரு பெண்மணியாவது, துணிச்சலுடன் முன் வந்து வெற்றியும்பெற்றது மகிழ்ச்சியுடன் பாராட்டத்தக்கதாகும். நகரிலுள்ள மொத்த வாக்காளரில் சரிபாதிப்பேர் பெண்கள். அந்த வீதாசாரக் கணக்கின்படி பார்த்தால் குறைந்தது 12 பெண் மெம்பர்களாவது இருக்கவேண்டும். படித்த, திறமை வாய்ந்த, அனுபவம் மிக்க, தொண்டு மனப்பான்மையுள்ள பெண்கள் யாழ்ப்பாணத்தில்பலருண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பான்மையாக வாழும் வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு தமிழ்மொழி நன்கு தெரிந்த பொலிசாரையும் சிங்கள மக்கள் பெரும்பான்மையாக வாழும் தென்னிலங்கைப் பகுதிகளுக்கு சிங்களம் நன்கு தெரிந்த பொலிசாரையும் கடமையாற்ற நியமிப்பதன் மூலம் பொதுமக்களுக்கும் பொலிசாருக்குமிடையில் நல்லுறவு வலுப்பெறவும் பொதுமக்களுடன் பொலிசார் மரியாதையாக நடந்து கொள்ளவும் வழி முடியாது. அவர்களுக்குப் போதிய வருமானம் இல்லை. வீட்டுவசதிமற்றும் வாழ்க்கை வசதிகளும் குறைவு. இதனுல் அவர்கள் அதிருப்தியுடன் தான் வாழ நேரிடுகிறது. அதிருப்தி கொண்டவர்களிடம் மரியாதையை வருடத்தில் ஒரு வாரத்தில் கூட எதிர்பார்க்க முடியுமா? 'மரியாதைவாரம்' அனுஷ்டிப்பதற்கு ஏற்பாடுகள் செய்பவர்கள் இவற்றையும் சிந்திப்பது நல்லது.

## மேற்கு வங்காளம்

வட இந்தியாவிலுள்ள மேற்கு வங்காளத்தில் இப்பொழுது புதிய பிரச்னையொன்று தலை தூக்கியுள்ளது. இது அந்தராஜ்யத்தை மட்டும் பொறுத்த விஷயமாக இருக்க முடியாது. ஒரு ராஜ்ய கவர்னரின் உரிமைகள் கடமைகள் என்னவென்பதற்கு விடைகாணவும் இதேபோன்ற பிரச்னை இதர ராஜ்யங்களுக்கும் பரவாமல் தடுக்கவும்இந்திய அரசாங்கம் வழிகாணவேண்டிய ஒரு நிலையை ஏற்படுத்தியிருக்கிறது.

1967ம் ஆண்டில் இந்தியாவில்நடந்த பொதுத் தேர்தலின்பின் மேற்கு வங்கத்தில் ஐக்கிய முன்னணி என்ற காங்கிரஸ் அல்லாத கூட்டுக் கட்சி ஆட்சி ஏற்பட்டது. அந்த முன்னணியில் ஏற்பட்ட பிளவு பல பிரச்னைகளை உருவாக்கி ஆட்சியைக் கலைத்து ராஷ்டிரபதி ஆட்சி ஏற்பட வழிவகுத்தது. சமீபத்தில் நடந்த இடைத்தேர்தலிலும்காங்கிரஸ் ஆட்சிக்கு வரமுடியவில்லை. எதிர்க்கட்சி ஐக்கிய முன்னணி தான். ஆட்சிக்கு வந்திருக்கிறது

அரசாங்கம் அமைப்பதில் எழுந்த பிரச்னைகளை தொடர்ந்து அந்தராஜ்ய கவர்னர் தர்மவீராவை இடமாற்றம் செய்ய வேண்டுமென முன்னணியினர் கோரினர். மத்திய அரசாங்கம் அதை ஏற்கவில்லை. நேற்று முன்தினம் மேற்கு வங்க ராஜ்ய சட்டமன்றத்தின் இரு சபைகளினதும் இணைப்புக் கூட்டத்தைத் தொடக்கி வைத்து கவர்னர் உரை நிகழ்த்தினுர்- அரசாங்கம்அதாவது அமைச்சரவை தனது கொள்கை திட்டங்களைத் தெரிவித்து தயாரித்துக் கொடுக்கும் உரையை கவர்னர் நிகழ்த்துவது சம்பிரதாயம்.

இந்த அமைச்சரவை தயாரித்துக் கொடுத்த உரையின் வாசகத்தில் முன்னர் ஐக்கிய முன்னணி அரசாங்கம் கலைக்கப்பட்டது பற்றியும் கவர்னரின் செயல் பற்றியும் குறிப்பிட்டிருந்த பகுதியை நீக்கிவிட்டுமிகுதியை கவர்னர் வாசித்து முடித்தார். இது அங்கு பரபரப்பையும் சர்ச்சையையும் ஏற்படுத்தியிருக்கிறது. மேற்கு வங்கா முதன் மந்திரியும் உதவி முதன்மந்திரியும் நேற்று புதுடில்லி வந்து பிரதமரைச் சந்தித்தும் பேசியிருக்கின்றனர்.

அமைச்சரவை தயாரித்துக் கொடுத்த உரையின் ஒருபகுதியை கவர்னர் வாசிக்கவில்லையே தவிர அவர் புதிதாக எதையும் தனது உரையில் சேர்த்துக் கொள்ளவில்லை. அமைச்சரவை யோசனை சொல்வதில் தவறில்லை. ஆனுல் கவர்னருக்கு உத்தரவு பிறப்பிப்பது சரியானது தானு?

அரசியல் அமைப்பு சட்டதிட்டங்கள் எதுவாகஇருப்பினும் ஒரு ராஜ்யத்தில்அந்தராஜ்ய அரசாங்கம்நியாயம்வழங்கவில்லையென அங்கு வாழும் மக்களில் ஒருபிரிவினர் கருதினுல்அவர்கள் கவர்னருக்குத்தானே முறையிடலாம்.

கவர்னரும் ராஜ்ய அமைச்சர்களும் மனம் விட்டுப் பேசி ராஜ்யத்தினதும் நாட்டினதும் முன்னேற்றத்துக்கும் மக்களின் நல்வாழ்வுக்கும் ஒத்துழைத்து செயலாற்ருவிடில் கவர்னர் பதவியினுலோ அரசாங்கங்களினுலோ யாருக்கும் என்ன பயன்?

இப்பத்திரிகை, ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1969-ம் ஆண்டு மார்ச் மாதம் 8-ம் திகதிஅச்சிட்டு வெளியிடப்பட்டது.

வேண்டும்

ஓர் உள்ளூர் ஆட்சி மன்றம் மத்திய அரசாங்கத்துடன் தமிழில் தொடர்பு கொண்டு தமிழில் பதில் பெறும் உரிமையுடையதாக இருக்க வேண்டும். ஓர் உள்ளூர் ஆட்சி மன்றம் மத்திய அரசாங்கத்திடமிருந்து தமிழில் பதில் கோருவது உண்மை மயதிய அரசாங்கம் தமிழில் பதில் எழுத வேண்டியது கடமை. சிங்களத்தில் எழுதித் தமிழில்மொழிபெயர்ப்பும் இருந்ததைதிரு விஸ்வநாதன் கண்டதாகக் கூறுகின்ருர். இது அர்த்தமற்றதாகும். தமிழ்கடிதத்திற்குத் தமிழில்தான் பதில் தரவேண்டும்.

### தபால் தொடர்பு

ஓர் உள்ளூராட்சி மன்றத்திற்கும் மத்திய அரசாங்கத்திற்கும் இடையே உள்ள தொடர்பு ஒரு தனிமனிதனுக்கும் அரசாங்கத்திற்கும் இடையே உள்ளதுபோன்றதான் இப்பிரச்னையைக் கொண்டுவந்தது மொழிப்பிரச்னையைத் தீர்க்கவும் தேசிய ஐக்கியத்தை நிலைநாட்டவும் என திரு. விஸ்வநாதன் கூறுகிருர். இந்நாட்டில் சிங்களத்துடன் தமிழும் சம அந்தஸ்து பெற்ற ஓர் அரசகரும மொழியாகச் சட்டப்படி பிரகடனம் செய்யப்பட்டு நடைமுறையில் இருமொழிகளும் அரசகரும மொழிகளாகத் திகழ்ந்தால் அல்லாது இலங்கையில் மொழிப்பிரச்னை தீரப்போவதில்லை, இக்கருத்தை சம அந்தஸ்துக்காகப் போராடிய காலத்தில் கொல்வின் ஆர். டி? சில்வா தெளிவாகக் கூறினுர். அன்று கூறப்பட்ட இக்கருத்து நூற்றுக்கு நூறு வீதம் சரியாகும். மேலும் வீழ்ச்சி அடைந்துவரும் முதலாளித்துவ சமுதாய அமைப்பினுள் தேசிய ஐக்கியத்தை நிலைநாட்டலாம்என்று யாராவது கனவு கண்டால் அவர் தன்னை சோஷலிஸ

புகுந்து பலரூபா பெறுமதியான பொருட்களை களவாடிச் சென்றுள்ளனராம். இதுபற்றிய விசாரணை செய்த பொலிசார் கைவிரல் அடையாளங்களையும் எடுத்துச் சென்றுள்ளனர்.

— —

### கோழி ...

[2ம் பக்கத்தொடர்ச்சி]

வழ: இன்ஸ்பெக்டர் டயஸை தெரியுமா?- தெரியாது.

வழ: சார்ஜண்ட் தாமோதரம்பிள்ளையைத் தெரியுமா?- தெரியாது.

ஜூரிசபை தலைவர்: சீவல் கத்தியை ஒரு வருடமாகப் பாவித்ததாகவும், தினமும் காலையும், மாலையும் கத்தியைத் தீட்டுவதாகவும் சொன்னீர். அப்படியானுல் கத்தி நன்ருகத் தேய்ந்திருக்கும்?- கொஞ்சம்தான் தேய்ந்திருக்கும்.

(விசாரணை தொடர்ந்து நடைபெறுகின்றது.)

கஷ்டமான பகுதி பொல்கொல்லயில் அமையும் சுரங்கப்பகுதியாகும். இப்பொழுது இந்தக் சுரங்கநிர்மான வேலை முடிவடையும் தறுவாயிலுள்ளது. இதுமுடிவடைந்ததும் மகாவலியின் ஒருபகுதி காலவீவாவுக்கும்இன்னெருபகுதி கந்தலாமவுக்கும் திருப்பப்படும்.

இவ்வாறு அனுராதபுர அரசாங்க அதிபர் திரு ஐவன் சோமவிக்ரம பத்திரிகை நிருபர்களுக்களித்த பேட்டியொன்றில் குறிப்பிட்டார். அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில் காலவீவ நோக்கித் திருப்பப்படும் மகாவலியினுல் சில பெரிய குளங்களும் நிரம்பும் நுவரவிவாவுக்கு அளிக்கப்படும் நீர் அப்பகுதியிலுள்ள தண்ணீர் பிரச்னையை நீக்கி புதிய நகரம் முழுவதிற்கும் விநியோகிக்கப்படுவதோடு நீர்ப்பாசனத்துக்கும் பயன்படும் இந்த மகாவலி திட்டத்தினுல் 42,000 ஏக்கர் மேலதிக நிலப்பரப்பு பயிர் செய்கையின் கீழ் கொண்டுவரப்படும் எனத் தெரிவித்த அரசாங்க அதிபர் மகாவலி கங்கை திட்டத்தின் முதல் பகுதியால் ஜூன் மாதம் தொடங்கி அனுராதபுரப் பகுதி நன்மையடைவதையிட்டுத் தான் மகிழ்ச்சியடைவதாகத் தெரிவித்தார். இதன் பொருட்டு விஜிதபுர காலவீவ பகுதியில் நீர்ப்பாசன காரியாலயமொன்றும் நிறுவப்படுமெனவும் கூறினுர்.

## சுகாதார வாரம்

யாழ்ப்பாணம் சனி

நாவற்குழி மகாவித்தியம்லய சிரேஷ்ட மாணவா மன்றம் இம் மாதம் 9-ர் திகதி சுகாதார வாரத்தைக் கொண்டாடத் தீர்மானித்துள்ளது. பிரதம விருந்தினராக வட்டார சுகாதார அதிகாரி கலந்துகொள்ளுவார்.

நநி

## ரூபா 10 ஆயிரம் வழங்கப்பட்டது

யாழ்ப்பாணம் சனி

நாவற்குழி கிராமசபைக்கு ரூபா 10'000 உள்ளூராட்சி அமைச்சு வழங்கியுள்ளது.

அண்மையில் வடபகுதிக்கு விஜயம் செய்த உள்ளூராட்சி அமைச்சர் திரு ஆர். பிரேமதாசா நாவற்குழிக்கு விஜயம் செய்தபோது அவரிடம் நவீன நூல் நிலையமொன்றை உருவாக்க ரூபா 10,000 நிதிஉதவி செய்யுமாறு நாவற்குழி கிராமசபைத் தலைவர் திரு சோ. சடாட்சரம் கேட்டதைத் தொடர்ந்தே இத் தொகை வழங்கப்பட்டுள்ளது.

நநி

## வர்த்தக ஊழியர் கழகம்

உடும்பராய், வெள்ளி

யாழ்ப்பாணம் வர்த்தக ஊழியர்விளையாட்டுக்கழகம் ஒன்றை நிறுவுவதற்கான ஏற்பாடுகள் நடைபெறுகின்றன, திரு. செல்வராசா தலைமையில் நடைபெற்ற கூட்டமொன்றில் இவ்முடிவு எடுக்கப்பட்டது,

### தேவை

ரிங்கர்:

உயிலங்குளத்திலுள்ள பிரபல கராஜ் ஒன்றுக்கு ரிங்கர் வேலையில் அனுபவமுள்ள ஒருவர் தேவை. சென். ஜோசப் மோட்டோஸ் உயிலங்குளம் என்னும் விலாசத்திற்கு உடனடியாகத் தொடர்பு கொள்ளவும், 53

(8-ம்கலத் தொடர்ச்சி)

விரும்புவதாகவும் தெரிவித்தார். சீக்கிரம் திரும்பிவல் வேண்டுமென்று கேட்டதற்கு மகிழ்ச்சியுடன் தாம் வரக் காத்திருப்பதாக நேற்றுக் காலை கொழும்புக்குப் புறப்படுமுன் தெரிவித்தார்.

0 0 0

பித்துக்குளி முருகதாஸ் சுவாமிகளின் இன்னிசை பஜனை இம்முறை யாழ்ப்பாண நகரில் நடைபெருதது இங்கு பலருக்கும் பெரிய ஏமாற்றம். முந்தாநாள் உடுவில் கிராமசபை திறந்தவெளி அரங்கில் அவரது பஜனைக்கு திரளான ஆண்களும் பெண்களும்கூடியிருந்தனர். பஜனைப்பாட்டுகளை நன்கு பொருள்விளக்கி, பல நல்லுபதேசங்களையும் மனதில் பதியும்படி கூறுகிருர். புதிய புதிய மெட்டுகளில், அற்புதமான குரலில் அவர் பாடுவது, பொதுமக்களின் மனதைப் பெரிதும் கவர்கிறது. மூன்றுவாரகாலம் இம்முறை இலங்கையில் சுற்றுப் பிரயானம் செய்து ஆங்காங்கு பஜனையுடன் செய்த உபதேசங்கள், பலர் வாழ்க்கையையும் திருத்த உதவியிருக்கவேண்டும். உடுவில் கிராமசபையின் அழகிய வெளி அரங்கு என்மனதைப் பெரிதும் கவர்ந்தது.

0 0 0

மற்றுப் பற்றெனக் கின்றி
நின் திருப் பாதமே மனம்
பாவித்தேன்
பெற்றலும் பிறந்தேன்
இனிப் பிறவாத தன்மை
வந்தெய்தினேன்
கற்றவர் தொழுதேத்தும்
சீர்க்கறை ஊரிற் பாண்டிக்
கொடுமுடி
நற்றவா உனை நான் மறக்
கினும் சொல்லு நா நமச்சி
வாயவே

ஸ்ரீ சுந்தர மூர்த்தி
சுவாமிகள்

பாதிப்பேர் பெண்கள். அந்த வீதாசாரக் கணக்கின்படி பார்த்தால் குறைந்தது 12 பெண் மெம்பர்களாவது இருக்கவேண்டும். படித்த, திறமை வாய்ந்த, அனுபவம் மிக்க, தொண்டு மனப்பான்மையுள்ள பெண்கள் யாழ்ப்பாணத்தில்பலருண்டு அவர்கள் ஏன் இந்தப் பொறுப்பை நிறைவேற்ற முன்வரவில்லை என்று கேட்டதற்கு, இந்த உரிமையை தமிழ்ப் பெண்கள் பொதுவாக ஆண்களிடமே விட்டுவிட விரும்புவதாயும் தேர்தல் போராட்டத்தில் ஈடுபடப் பல பெண்களுக்கும் துணிவும் சக்தியும் இல்லையென்றும் ஒரு படித்த பெண்மணி தெரிவித்தார்.

இது ஓர் உரிமை விஷயமல்ல. பெண் சமூகம், ஜனநாயகத்தில் தங்கள் கடமையையும், பொறுப்பையும் நிறைவேற்ற வேண்டும். யாழ். மாநகரசபையில் புதிதாக ஒரு பெண் அங்கம் வகிப்பதால், முன்னைவிட சபையில் விவாதங்கள் மேலாக இருப்பதாயும் கேள்விப்பட்டேன்.

தேர்தல் போராட்டங்களில் பெண்கள் ஈடுபட முன்வரத் தயங்குவது இயற்கையே ஆனுல் ஒவ்வொரு வார்டுக்கும் இரு ஸ்தானங்கள் ஏற்படுத்தி ஒன்று ஆணுக்கு மற்றென்று பெண்ணுக்கு என்று ஒதுக்கினுல், சபை மெம்பர்களில் சரிபாதி பெண்கள் இருக்க வழிபிறக்கும். நம் பெண் சமூகத்தின் மதிப்பு உயர்வதுடன், நகரத்தையும் தட்டி எழுப்பிப் பல அபிவிருத்திகள் செய்யமுடியும். இவ்விஷயத்தில் நமது பெண் சமூகம் மனம்வைத்துத் தீர்மானம் நிறைவேற்றிக் கிளர்ச்சியும் செய்தால் அவர்களுக்கு வெற்றி கிடைப்பது உறுதி. செய்வார்களா?

0 0 0

ஹைகமிஷனர் கண்டேவியா, பதவியைவிட்டு இந்தியாவுக்கு திரும்பப்போவதாக ஒரு கொழும்பு ஆங்கிலப் பத்திரிகையில் செய்தி வெளியாகியிருந்தது. அதைப் பற்றி அவரிடம் கேட்டதற்கு அப்பத்திரிகை பிரியாவிடையளிக்க, தாம் காத்திருப்பதாக, நகைச்சுவையுடன் கூறினுர் அவர். அதாவது அவர் இங்கு நீடித்து ஹைகமிஷனராக இருப்பாரென்பதே கருத்து.

யாழ்ப்பாணத்துக்கு முன்னர் அவர் விஜயஞ்செய்தபோது நமது அழகான தீவுகள் அவர் மனதைப் பெரிதும் கவர்ந்தன. தாம் ஓய்வு பெற்றபின், இவ்வித தீவுகளில் அமைதியாக வசிக்க

(7-ம் கலம் பார்க்க)

# 'ஆங்கில மொழிசகாப்தம் மறைவது கவலையளிக்கிறது'

## யாழ்ப்பாணக்கல்லூரி அதிபர் கருத்து



அராலி, வெள்ளி

தாய்மொழியில் கல்வி போதிக்கும் இந்தச் சகாப்தத்தை வரவேற்கும் அதே வேளையில் அதற்கு முந்திய சகாப்தம் நம்மைவிட்டுக் கழிந்துபோவதைப் பார்ப்பதற்குக் கவலையாகத்தானிருக்கிறது என்று யாழ்ப்பாணக் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழாவை முன்னிட்டு கல்லூரி அதிபா வெளியிட்டுள்ள தமது வருடாந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

அதிபர் தமது நீண்ட அறிக்கையில், ஆங்கிலக் கல்வி பற்றிக் குறிப்பிட்டதாவது:-

1968-ம் ஆண்டின் இறுதியோடு நமது கல்வி நிலையங்களில் ஆங்கிலம் போதனு மொழியென்ற நிலை முற்ருக நீங்கிவிட்டது. கிரேட் XII ல் விஞ்ஞானம் பயிலும் மாணவர்கள் தாம் கடைசியாக எல்லாப்பாடங்களையும் ஆங்கிலந்தில் பயில்பவர்களாக இருந்தனர். இவர்களும் விலகியவுடன் இந்தக் கல்லூரியினதும், இந்த நாட்டினதும் மகத்தான ஒரு கல்வி சகாப்தம் மறைகின்றது. தாய்மொழிக் கல்வி சகாப்தத்தையும் அதன் முக்கியத்துவத்தையும் வரவேற்கும் அதே வேளையில் அதற்கு முந்திய சகாப்தம் கழிந்துபோய்க் காண்டிருப்பதை பார்ப்பதற்குக் கவலையாக இருக்கின்றது. அந்தச் சகாப்தம் கல்வியின் நோக்கத்தை முழு அளவில் விஸ்தரிக்கச் செய்கிறது. மகத்தான இலக்கிய, நாடக, கலை நுட்ப கருவூலங்களை நமக்கு அளித்ததோடு, கல்லூரி ஆசிரியர்களதும், மாணவர்களதும் கருத்துக்களுக்கும், அறிவுக்கும் தேவையான கலாசாரங்களையும், நாகரிக மேம்பாடுகளையும் கொடுத்தது.

வகுப்பறைகளையும்மேடைகளையும் உத்வேகம் கொள்ளச்செய்தது. அந்தச் சகாப்தத்தில், நமது நூலகங்கள், இலக்கிய மேடைகள், ஆட்சிப்பேரவைகள், வித்தியா பீடங்கள் யாவும் செழிப்புற்றன. அரசமொழியில் நேரு அல்லது பண்டார நாயக்கா நிகழ்த்திய சொற்பொழிவுகள் மக்கள் மத்தியில் தேசிய உணர்ச்சியை வளர்த்தன. உண்மையில், ஆங்கில மொழியின் மூலம் மகத்தான கருத்துக்களை வெளியிட்டதன் மூலமும் சட்ட நடைமுறைகள் மூலமுமே இந்தியாவும் இலங்கையும் தமது விடுதலையை நோக்கி வெற்றி நடை போட முடிந்தது. எனவே அந்த சகாப்தம் பற்றி ஒரு சில வார்த்தைகளாவது கவலையுடன் கூறிப்பிடாமல் வெறுமனே கழிந்து போவதற்கு விட எனக்கு மனம் வரவில்லை.

உயர் கல்வி போதனை பற்றி அவர் குறிப்பிடுகையில், ஆசிரியர்களின் முக்கிய கடமைகள் பற்றி வலியுறுத்தினுர்.

நவீன கல்வி வளர்ச்சி ஆசிரியரின் தகைமையிலும், வகுப்பறை, மாணவர் விடுதி, விளையாட்டுகளம் போன்ற அவர் பணியாற்ற வேண்டிய துறைகளில் அவர் எடுக்கும் அக்கறையிலும் தான் தங்கியிருக்கிறது என்ருர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org